மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 25 புதன்கிழமை (09.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 224

# வெள்ளைவான் கடத்தல்களுக்கு அரசும் படையினருமே பின்னணி!

## ஆதாரங்களுடன் விவரங்களை ஐ.தே.க. நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஜூலை 09

**நாட்டில் இடம்பெற்று வரும் வெள்ளை வான்களில் ஆள்களைக் கடத்தும் நடவடிக்கைகளுக்கு அரசும் இராணுவத்தினருமே பின்னணி என்று நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியிருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி.**

**இத்தகைய வெள்ளைவான் கடத்தல்கள் தொடர்பான முழு விவரங்களையும் உரிய ஆதாரங்களுடன் தமது கட்சி விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் ஐ.தே.க. அறிவித்திருக்கிறது.**

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாட்டில் ஊடகவியலாளர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். யுத்தம் தொடர்பாகவும், அரசின் ஊழல் மோசடிகள் தொடர்பாகவும் ஊடகங்களில் வெளிப்படுத்த முடியாமல் உள்ளது.

அவ்வாறான விடயங்கள் தொடர்பான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பீரங்கி தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணம் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் சிக்கி இருவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

நாகர் கோவில் மற்றும் முகமாலை முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலில் படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பலாலி இராணுவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குஞ்சுப்பரந்தனில் வான் தாக்குதல் குடும்பஸ்தர் காயம்; வயல்கள் நாசம்

கொழும்பு, ஜூலை 09

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பரந்தன் - பூநகரி வீதியில் குஞ்சுப்பரந்தன் சந்திப் பகுதியில் விமானப் படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக்காலை 10.05 மணியளவில் தாக்குதல் நடத்தின. அதில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார். விவசாய நிலங்களும் சேதமடைந்தன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைக்காட்சி செய்தியாளருக்கு நீதிமன்ற வளாகத்துக்குள் மிரட்டல்!

கொழும்பு, ஜூலை 9

'சிரச', 'எம்.ரி.வி.', 'சக்தி' ஆகிய தொலைக்காட்சிச் சேவைகளின் நீதிமன்றச் செய்தியாளரான த.ஜெயக்குமார் நேற்று கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்ற வளாகத்தில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவரினால் அச்சுறுத்தப்பட்டார் என்று சுதந்திர ஊடக இயக்கத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாண முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய உயர் நீதிமன்றத்தில், இராணுவத்தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர) மாதிரி வினாத்தாள்
★ இரசாயனவியல் - 01

8 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பரீட்சை

## குடாநாட்டில் நேற்றிரவு ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

குடாநாட்டில் நேற்றிரவு 7மணிக்குச் சற்றுப் பின்னராக, சுமார் 15நிமிடங்களாக ஹெலி வட்டமிட்டு நோட்டமிட்டது.

தென்மராட்சி மற்றும் தீவுப்பகுதி, யாழ். நகரின் கரையோரப்பகுதிகளில் அங்கும் இங்குமாக வட்டமிட்டு ஹெலி நோட்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் முறையற்ற ஒப்பந்தம்; நாட்டின் பாதுகாப்புக்கு பேராபத்து!

### சபையில் விமல் வீரவன்ஸ அபாயச்சங்கு!

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் எண்ணெய் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான - இந்தியாவுடனான - ஒப்பந்தம் நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாது முறையற்ற விதத்தில் செய்யப்பட்டுள்ளது என்றும் -

இந்த ஒப்பந்தம் தொடர்பான சிபாரிசுகளை ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நிபுணர்களையும் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் - விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்ள இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு அகழ்வுப் பணி இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் செய்யப்படும் முன்னர் பின்பற்றப்படவேண்டிய எந்த விடயமும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஒரு நாட்டின் எரிபொருள் வளம் என்பது அந்த நாட்டிற்கு மிக முக்கியமான ஒன்று. இதைச் சரியான முறையில் கையாண்டால் நாட்டைச் செல்வச் செழிப்புள்ள நாடாக மாற்றலாம். பிழையான முறையில் கையாண்டால் நாடு அழிந்துவிடும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலைத் தடுப்பது குறித்து கொழும்பு நகரில் நேற்றிரவு ஒத்திகை!

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு நகருக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்த வரும் விமானங்களை எவ்வாறு தரையிலிருந்து சுட்டுவீழ்த்துவது என்பது தொடர்பில் நேற்றிரவு படைத்தரப்பினர் ஒத்திகை ஒன்றில் ஈடுபட்டனர்.

நேற்று இரவு 7 மணியலிருந்து 8 மணிவரை கொழும்பின் வான் பரப்பில் விமானப் படையினரின் விமானம் ஒன்று வட்டமிட்டது. இதனையடுத்து தரையிலிருந்து படையினர் விமானத்தை நோக்கி 'பரா' ஒளியைப் பாச்சி அந்த விமானத்தைக் கண்காணித்தனர்.

கொழும்புத் துறைமுகம் உட்பட கொழும்பின் சில கேந்திர முக்கியத்துவம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டம் செல்லும்

## 55 வயதுக்கு மேற்பட்டோரும் இனி படையினரின் பயண அனுமதி பெறவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 9

குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் 55வயதுக்கு மேற்பட்டவர்களும் இனிமேல் பாதுகாப்புப் படையினரின் பயண அனுமதிபெற வேண்டும்.

பலாலிப்படைத் தலைமையகம் இதனைத் அறி வித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக 55வயதுக்கு மேற்பட்டவர்கள், படையினரிடமிருந்து அனுமதி பெறாமல் கிராம சேவையாளர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சிப்பாய்கள் இருவர் பலி

வவுனியா, ஜூலை 9

வவுனியா,அரசடிக்குளம் - காந்திநகர் வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.35 மணியளவில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார். காயமடைந்த இராணுவச் சிப்பாய் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் சிறு குழு ஒன்று மறைந்திருந்து தங்கள் மீது தாக்குதல் நடத்தியது என்றும் - அதற்குத் தாங்கள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் அவர்களுக்குப் பாரிய இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் - படைத்தரப்பினர் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் மேற்கொண்டனர்.

(அ-சு)

## குண்டு துளைக்காத வாகனங்கள் பிள்ளையானிடமும் உள்ளனவா?

### ஐ.தே.க. கேள்வி; பதிலளிக்க அரசு மறுப்பு!

கொழும்பு, ஜூலை 09

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுக்கு குண்டுதுளைக்காத வாகனங்களை அரசு வழங்கியிருக்கின்றதா என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியது. எனினும் அதைப் பற்றி எதுவும் கூறமுடியாது என்று அரசின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா மறுத்துவிட்டார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
திருமதி வ.சோமசுந்தரம் அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி செல்லக்கண்டு அருளம்பலம்

அவர்கள் இறைபதம் எய்தியமை அறிந்து மிக்க துயருறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(533670)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளருமான சி.சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சிவபாதம் இராசம்மா

(76125)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர்

# கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்



எமது மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர்
திரு.சி.சிவகுமார் அவர்களின் அன்புத்
தாயார்

## திருமதி சிவபாதம் இராசம்மா

(76126)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனை உத்தியோகத்தர்
திரு.இ.இரவிச்சந்திரன் அவர்களின்
பாசமிகு தந்தையார்

## நடேசு இரத்தினராசா

(76122)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# மீள் கேள்வி அறிவித்தல்

01. கீழ்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொ இல | ஒப்பந்த குறியீட்டு இல | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/VTC/01/2008 | தொழிற் பயிற்சிநிலையம் நிர்மாணம். சண்டிலிப்பாய். கட்டம் I | M7/C8 | 55,000.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகள் சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
I) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
II) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
IV) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
V) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VATபதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021 222 2634) பரிசீலிக்க முடியும்.

04. கேள்வி ஆவணங்கள் 10.07.2008 தொடக்கம் 25.07.2008 பி.ப 1.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

05. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 28.07.2008 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும்.
இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமூகமளிக்க முடியும்.

06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/55369) மாவட்ட கேள்விச் சபை [illegible] அரசாங்க அதிபர்.

# தவறிவிட்டது

தேவதாஸ் செல்வதாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை [776612329V], வி.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை அடங்கிய பேஸ் [PURSE] ஒன்று ஆனைக்கோட்டைக்கும் மானிப்பாய்க்கும் இடையே 20.06.2008ம் திகதி அன்று தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து இதை கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் ஆலடி சந்தியிலுள்ள தாஸ் வெல்டிங் பட்டறையில் (Thas welding shop) ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். உரிய சன்மானம் வழங்கப்படும்.

# Spoken English

Nafisa Spoken English VCD கள் மற்றும்
Learning English VCD (சிறுவர்களுக்கானது)
விற்பனைக்குண்டு.
அன்னை புத்தகசாலை,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

# காணி தேவை

வல்வெட்டித்துறை, திக்கம்,
வியாபாரிமூலை பகுதிகளில்
காணி தேவையாகவுள்ளது.
தொடர்பு:-
சிதம்பரப்பிள்ளை
தொ.பே. 021226-3734

# இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.
(78028)

# பொன்விழா பரிசளிப்பு, கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 9

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பொன் விழா, பரிசளிப்பு விழா, புதிய கட்டடத் திறப்புவிழா ஆகியன நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்கள பாடசாலை வேலைப் பகுதிப் பொறியியலாளர் கு.சிவபாலன் கலந்து கொள்வார். (202)

# நவாலி தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இன்று விசேடவழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 9

நவாலி சென்ற்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 13ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி ஸ்ரீ சின்னக்திர்காம முருகன் ஆலயத்திலும் மாலை விசேடவழிபாடுகள் இடம்பெறவிருக்கின்றன.

நவாலி சென்ற். பீற்றர்ஸ் ஆலயம் மீதான தாக்குதல் இடம் பெற்ற 13 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அழிவுச் சின்னங்களை இன்றும் மக்கள் காணக் கூடியதாக உள்ளது. (01-95)

# வெளிமருந்தாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

எதிர் வரும் 12 ஆம் திகதி கொழும்பில் நடக்கவிருக்கும் வெளிமருந்தாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் உள்ள சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் பிராந்திய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களைகலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறுமாவட்ட [illegible] (01)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லக்கண்டு அருளம்பலம்



ஓட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் உடையார்லேன், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு அருளம்பலம் (07.07.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் அருளம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் அமிர்தலிங்கம் (முன்னாள் பிரதி அதிபர், யா/விடத்தற்பளை கமலாஷினி வித்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தவமணி மற்றும் வனிதாமணி (ஆசிரியர், யா/ இந்து ஆரம்ப பாடசாலை), விக்னேஸ்வரராசா (சாரதி), செல்வராசா (பிரதி விவசாயப் பணிப்பாளர், வடமாகாணம்),அரியராசா (கனடா), குபேந்திரராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சி.சோமசுந்தரம் (ஆசிரியர், யா/ கைதடி சேதுகாவலர் வித்தி), சிவஞானசோதி, சாந்தி, ராகினி (கனடா), புஸ்பா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துவாரஹா, துவாரஹன், கீர்த்திஹா, ஜயந்திஹா, ஜசோகா, சாகித்தியா, சுபோஷியா, வினுசாந், சிந்துஜன், தனுஜன், அபினாஸ், அகிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2008) புதன்கிழமை பி.பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு. (76119)
நிரந்தர முகவரி: ஒட்டுவெளி, மிருசுவில்
தகவல்: குடும்பத்தினர்

## திருமதி சிவபாதம் இராசம்மா



கோப்பாய் மத்தி, கணபதியப்புலத்தினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட திருமதி சிவபாதம் இராசம்மா நேற்று (08.07.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா சிவபாதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவராசா (ஆய்வுகூட உதவியாளர், யாழ்/ அத்தியார் இந்துக் கல்லூரி), சிவகுமார் (பிரதி விவசாய பணிப்பாளர் – விரி வாக்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் பவானி, சிவபாமா (ஆசிரியை, யா/ உசன் இராமநாதன் மகா வித்தி யாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரசன்யா, விதுர்சன், சௌமியா, கௌசல்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்றவர்களான அழகம்மா, சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலசேகரம், தவசேகரம், பேரானந்தராசா (சாலைப் பரிசோதகர், இ.போ.ச.), கமலாதேவி, உருக்குமணிதேவி, சரஸ்வதிதேவி (நூலக உதவியாளர், யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2008) புதன் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.சிவராசா
(மகன் – ஆய்வு கூட உதவியாளர், யா/ அத்தியார் இந்துக்கல்லூரி),
சி.சிவகுமார் (மகன்–பிரதிவிவசாயப் பணிப்பளார் – விரி., விவசாயத் திணைக்களம்,யாழ்ப்பாணம்)

கணபதியப்புலம்,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (76124)

## திருமதி அமர்தலிங்கம் தெய்வானைப்பிள்ளை



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தலிங்கம் தெய்வானைப் பிள்ளை (07.07.2008) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான தம்பையா - செல்லம் தம்பதியினரின் அன்பு மகளும் அமரர்களான தம்பையா - நாகமுத்து (உரும்பிராய்) தம்பதியினரின் அன்பு மருமகளும், அமரர் தம்பையா அமிர்தலிங்கம் (மனேச்சர்) அவர்களின் அருமை மனைவியும், சிவபாக்கியம் (சுதுமலை), அமரர் ஆனந்த குமாரசாமி (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், சந்திராவின் உடன்பிறவா சகோதரியும் அமரர்களான அன்னலட்சுமி (கனடா), நமசிவாயம் , அன்னபூரணம், குலசேக ரம்பிள்ளை (சுதுமலை), நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் தயாளகுணநாதன் (J.P. Vital Comm, Surluc A.P.O. Col. 11), தயாளினி, தயாபரி (சுதுமலை) ஆகியோரின் அன்புத் தாயும் நளாயினி (கொழும்பு), சிறிபாலன் (I.C.R.C.), அன்பழகன் (செல்வம் - சுதுமலை), தர்மபாலன் (பாலன் - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதுபினி, லக்ஷி, தனுசியா, அனுசன், சிவானுசன், சிந்துஜன், யனுசியா, தர்சானா, அருணன், மதுசன், சபேதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2008 ) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு.
தொ.பே: 0776849140,
0114721422 (76129)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
தயாளகுணநாதன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பின் உதவியுடன் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாமும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வும் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றன. இந் நிகழ்வில் மனித நேய அமைப்புகளின் யாழ்.மாவட்ட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எஸ்.ரஞ்சித்குமார் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.
மேற்படி அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.தனுசியன் விசேட தேவையுடைய மாணவருக்கு கற்றல் உபகரணப் பொதி வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் வளவாளர்களையும் மூன்றாவது படத்தில் காணலாம். (72)

# கோட்டங்களுக்கு இடையேயான சிறுவர் அரங்க நிகழ்வு வலயத்தில் போட்டியிட 6 பாடசாலைகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்.வலயத்திற்கு உட்பட்ட மூன்று கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகளில் வலயமட்டத்தில் போடியிட ஆறு பாடசாலைகள் தெரிவாகியுள்ளன.

யாழ்.வலயத்தின் மூன்று கல்விக் கோட்டங்களில் உள்ள ஆரம்பக்கல்வி மாணவர்களின் சிறுவர் அரங்க நிகழ்வுகள் யாழ்.வலய ஆரம்பகல்விப் பிரிவினரால் கடந்த மாத இறுதிநாள்களில் நடத்தப்பட்டதாக ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர் பூ.குகதாசன் தெரிவித்தார்.

யாழ்.கல்விக் கோட்ட மாணவர்களின் அரங்க நிகழ்வுப் போட்டிகள் 14 பாடசாலை மாணவர்களுக்கிடையே யாழ். மத்திய கல்லூரியிலும் - நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த 22 பாடசாலை மாணவர்களுக்கான அரங்க நிகழ்வுகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்- கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த மாணவருக்கான போட்டிகள் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற ஆறு பாடசாலைகளும் வலய மட்ட அரங்க நிகழ்வு போட்டிகளில் பங்குபற்ற உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (203-302)

# வடமாகாண தமிழ்த்தினப் போட்டிகள் இந்த முறையும் ஒளிப்பதிவு செய்யப்படும்

## இதன் அடிப்படையிலேயே முடிவுகள் வெளியிடப்படும்

வலி.வடக்கு, ஜூலை9

வடமாகாணமட்ட தமிழ்தினப் போட்டிகளில் யாழ்.மாவட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் போட்டிகள் இந்த முறையும் வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்யப்படவுள்ளன.

விவாதம், தமிழறிவு, வினா விடைப் போட்டிகள் மற்றும் எழுத்தாக்கப் போட்டிகள் தவிர்ந்த நாடகங்கள், கூத்துக்கள் நடனம்ஆகிய போட்டிகளே வீடியோ ஒளிப்பதிவு மூலம் எடுக்கப்பட்டு வட மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

வடமாகாண கல்விஅமைச்சினால் ஏனைய மாவட்டங்கள் கலந்து கொள்ளும் போட்டியில் பங்கு பற்றும் நடுவர்களால் யாழ். மாவட்ட மாணவர்ளின் வீடியோஒளிப்பதிவு நாடா பார்வையிடப்பட்டு மாகாண மட்டப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட வுள்ளன.

கடந்தஆண்டு இந்த நடைமுறை முதல் தடவையாக முன்னெடுக்கப்பட்டது.

போக்குவரத்து வசதியின்மை, பாதுகாப்பு போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு யாழ்.மாவட்ட மாணவர்களின் தமிழ்மொழித் தினப் போட்டிகள் வீடியோ ஒளிப்பதிவு மேற்கொள்ளப்படுவதாகவும் கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203-86)

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தால்

# போதைவஸ்து ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மாணவரிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர் புகைத்தல், போதைவஸ்து ஒழிப்பு வாரத்தையொட்டி தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளனர்.

புகைத்தல், போதைவஸ்து பாவனையை நீக்கி நல்லொழுக்கத்தினைப் பேணும் நோக்கில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கவிதை, கட்டுரைப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

தரம் 6 தொடக்கம் தரம் 8 வரை கீழ்ப் பிரிவாகவும் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை மத்திய பிரிவாகவும் தரம் 12, 13 ஆகியவை மேற் பிரிவாகவும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

''புகைத்தல், போதைவஸ்துப் பாவனை மக்களின் வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கங்கள்'' என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும் -

'புகைத்தல் ஒழிப்போம், புதியதோர் சமுதாயத்தை வளர்ப்போம்' அல்லது 'போதைப் பாவனையை ஒழிப்போம் புதிய தோர் சமூகத்தை வளர்ப்போம்' அல்லது 'குடியைக் கெடுக்கும் குடி' என்னும் தலைப்பிலான கவிதைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர் வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், சமுர்த்தி சமூக அபிவிருத்திமன்றம், பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

# தீவக வலயத்தில் மூன்று கோட்டங்களிலும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள்

தீவகக்கல்வி வலயத்திற்கு உட்பட்ட வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று கோட்டங்களிலும் உள்ள 1ஏபி, 1சி என இருவகை பாடசாலைகளில் கல்விகற்று வெளியேறிய இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரத்தில் மீளக்கற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கும் பயன்படும் வகையில் தொழிலுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை கோட்டத்தில் இன்று புதன்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் காரை. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திலும்-

எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவுக் கோட்டத்தில் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்திலும் எதிர்வரும் 16 ஆம் திகதி வேலணைக் கோட்டத்தில் வேலணை மத்திய கல்லூரியிலும் நடத்துவதற்கான ஒழுங்குகளை முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க. கணபதி மேற்கொண்டுள்ளார்.

இதனை நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்கள் நடைமுறைப்படுத்த உள்ளனர்.

ரூளின் ஸ்தாபன முகாமையாளரும், பொறியியலாளரும், பொறியியலாளர் மதி உரைஞருமான ஏந்திரி சி. உருத்திரலிங்கம், உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்கியல் துறைத் தலைவர் கதிரமலை, தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் அலுவலர்களான என். ஜெகன், வே. சபேசன் மற்றும் சக உத்தியோகத்தர்களும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தவுள்ளனர். (203)

# யாழ். மக்களுக்குச் சொல்லொணாத் துயரங்கள்; அந்த அவலங்களை நேரில் வந்து பார்த்து எழுதுங்கள்

## புத்தக வெளியீட்டு விழாவில் முன்னாள் பேராயர்

கொழும்பு,ஜூலை 9

யாழ். மக்கள் பல சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அந்த அவலங்களை கலாநிதி ரூபசிங்க போன்றோர் நேரில் வந்து பார்த்து எழுதுங்கள்.

இலங்கை தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் வண.கலாநிதி ஜெபநேசன் அடிகளார் இவ்வாறு கோரியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் கலாநிதி குமார் ரூபசிங்கவின் புத்தக வெளியீட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

இலங்கையில் கடந்த 30 ஆண்டு கால யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்பு, சொத்தழிப்பு மற்றும் பொருளாதார இழப்புக்கள் குறித்து சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் உளவியல் மற்றும் சமூக ரீதியான பாதிப்புகள் குறித்து எவ்விதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் மத்தியில் இந்த யுத்தமானது உளவியல் ரீதியாகவும் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதை உணர முடிகிறது.

ஓர் இனப்பிரச்சினை விவகாரத்தில் இரு விடயங்கள் இருக்கின்றன.அவற்றுள் ஒன்று, பெரும்பான்மையினரின் வகிபாகம். மற்றையது சிறுபான்மையினரது உரிமைகள். இவற்றுள் பெரும்பான்மையினரின் வகிபாகம் தொடர்பில் பலர் எழுதியிருக்கின்றார்கள். கருத்துக்களை கூறியிருக்கின்றார்கள். ஆனால், சிறுபான்மையினரது உரிமைகள் தொடர்பில் மிகச் சிலரே கவனம் செலுத்தியிருக்கின்றார்கள்.

அந்த வகையில், கலாநிதி குமார் ரூபசிங்க இலங்கையில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையின மக்களது உரிமைகள் தொடர்பில் செயலாற்றிவரும் மிகச் சிலரில் ஒருவர். பல செயற்திட்டங்களை அவர் தனது சக வாழ்வுக்கான மன்றத்தின் ஊடாக செயற்படுத்தி வருகின்றார். தனது நூல்கள் மற்றும் கட்டுரைகளில் சிறுபான்மையின மக்களது உரிமைகள் தொடர்பில் நிறைய எழுதியிருக்கிறார். கலாநிதி குமார் ரூபசிங்க போன்றோர், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்கு மக்கள் படுகின்ற அவலங்களை நேரில் பார்த்து அவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பெரும் எண்ணிக்கையில் குடாநாட்டிலேயே மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இதனால், குடாநாடு வனாந்தப் பிரதேசமாக மாறிவருகின்றது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக எந்த விதமான செயற்பாடுகளும் அங்கு இரவிலே நடைபெறுவதில்லை. இவ்வாறு, ஏராளமான பல சொல்லெணாத் துயரங்களை அங்குள்ள மக்கள் அனுபவித்து வருகின் றார்கள் என்று கூறினார்.



இந் நிகழ்வில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் போர் ஹட்ரெம், பிரட்மன் வீரக்கோன், பேராசிரியர் சுமண சிறிலியனகே மற்றும் பல அரசியல் வாதிகள், இராஜதந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (203)

# அற்புதத் திருப்பதிகங்கள் தொகுப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 9

'மூவர் பாடிய அற்புதத் திருப்பதிகங்கள்' தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மு.ப 11 மணியளவில் காரை நகர் சிதம்பரம் மாணிக்கவாசகா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (203)



சுன்னாகம் றோட்டறக் கழகத்தினால் சுன்னாகம் மதவடி ஒழுங்கைக்கு அருகில் பயணிகளின் நன்மை கருதி பஸ்தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பஸ்தரிப்பிடம் அமைக்கும் பணியில் றோட்டறக் கழக உறுப்பினர்கள் ஈடுபடுவதை படத்தில் காணலாம். (படம்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

சரவணை தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 9

சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இன்று கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 9

அல்லைப்பிட்டி உத்திரிய மாதா ஆலய திருவிழா எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நற்கருணை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும். புதன்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி செபமாலையுடன் ஆரம்பமாகி இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 9

சாவகச்சேரி துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள் ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 31ஆம் திகதி தேர்த்திருவிழாவும் முதலாம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203)

## இலவச ஆயுள்வேத வைத்தியசேவை

சங்கானை,ஜூலை9

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் இலவச ஆயுள்வேத வைத்திய சேவையும் ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு குட்டியப்புலம் பொதுநூலகத்திலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இது நடைபெறுள்ளதாக பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தச் சேவையையும் ஆலோசனைகளையும் பொதுமக்கள் பெற்றுப் பயனடையுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## சிரேஷ்ட பிரிவினருக்கான ஆங்கில நாடகப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான ஆங்கில தின மாவட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை சிரேஷ்ட பிரிவினருக்கான நாடகப்போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

காலை 8.30மணிக்கு சிரேஷ்ட பிரிவினருக்கான உரையாடல் நாடகமும் முற்பகல் 11மணிக்கு சிரேஷ்ட பிரிவினருக்கான பாடலுடன் கூடிய நாடகங்களும் இடம்பெற வுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்துப் பாடசாலைகளையும் உரிய நேரத்திற்கு சமுகமளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (203-86)

# சிவனின் ஆனந்தத் தாண்டவத்தின் சிறப்புப் பொருந்திய ஆனி உத்தரம்

*''தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே; அல்லற் பிறவி அறுப்பானே...''*

இவ்வாறு மாணிக்கவாசகர் பொன்னம்பலத்தே நின்று நடனம் புரியும் சிவபெருமானின் மகிமை கூறுகிறார். சோதியாய் சுடரொளி விளக்காய்த் திகழும் இறைவன் புரியும் ஆனந்தத் தாண்டவம் அடியாரின் பாவங்களைப் போக்கி, அறுத்து, பேரின்பப் பேறு அளிப்பதற்காம்.

**இன்று ஆனி உத்தரம்**

தில்லையிலே, சிதம்பரத்திலே, கனகசபை எனப்படும் அம்பலத்திலே, நின்று ஆனந்த நடனமிடும் நடராஜருக்கு உரிய உத்தரங்களில் ஆனி உத்தரம் சிறப்புடையது என்பர். ஆனி மாதத்தில் வரும் சிறப்புத் திருநாளும் அதுவே.

ஆதியும் அந்தமும் இல்லாத அந்த நடராஜனின் ஆனந்தத் தாண்டவம் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் குறிப்பதாகும். எல்லாப் பொருள்களும் தானே ஆகிப் பிரிக்கமுடியாதவனாக விளங்கும் சிவன், எல்லோருக்கும் உண்மைத் தத்துவ ஞானத்தைப் புகட்டும் பொருட்டே திருநடனம் புரிகின்றான்.

பொம்மலாட்டம் பார்க்கிறோம். பொம்மை தானாக ஆடுவது போலவே எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் திரைக்கு மறைய இருக்கும் ஒருவன், கயிறுகள் கொண்டு தான் அந்தப் பொம்மையை ஆட்டுவிக்கின்றான். அதுவே உண்மை. கயிறு அறுந்தால் பொம்மையின் ஆட்டமும் நின்று விடும்.

அதேபோல, உயிர்களுக்கு, மனிதர்களுக்குத் தெரியாமலே இறைவன் அவர்களை ஆட்டுவிக்கின்றான். ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே? அவன் ஆடுகின்றான். நாங்களும் ஆடுகிறோம். ஆண்டவன் எங்களை ஆட்டுவிக்கின்றான்.

நடனமிடும் சங்கரன் தன்னைச் சாராதவர்களுக்கும் நலன் நல்குபவன். அவனது எந்தச் சிறந்த குணாதிசயத்தை நாமும் வளர்ப்போமாக. எல்லோரிடத்தும் அன்பு கொண்டு, பேதம் காட்டாது அனைவருக்கும் உதவவேண்டும். இன்றைய ஆனி உத்தரத்தில் அதனையே உறுதி பூணுவோமாக.

*தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்,*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு.*

— ஞானக்கதிர்.


### தேவை

அப்பள தயாரிப்பு நிறுவனத்துக்கு பெண்பிள் ளைகள் தேவை. வேலை தெரிந்தவர்கள்/ பழக விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில்.

தொடர்பு: **R.S.M இன்டஸ்ரீஸ்,**
7ஆம் கி.மீ. மைல் கல்லடி, [சீனிப்புளியடி பாடசாலை அருகில்]
காங்கேசன்துறை வீதி, இணுவில். (78109)

### தவறிவிட்டது

உழவு இயந்திர இலக்கத்தகடு (ரக்டர் நம்பர் பிளேற்) (NPJM 3735) செல்லுடன் உடுவிலுக்கும் குருநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**இ.கலாநாதன்,** உடுவில் தெற்கு, சுன்னாகம்.
(76111) தொ.பே.இல.: **021 4591160**

### காணி தேவை

நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், கோண்டாவில், சுன்னாகம் போன்ற பகுதிகளில் மின்சாரம், நன்னீர் வசதியுள்ள, லொறிகள் போகக்கூடிய, சிறிய இன்டஸ்ரியல் நடத்தக்கூடிய 1-2 பரப்புக் காணி உடன் தேவை.

தொடர்பு: Mobile: 0041788080269 (SMS), 0041774232223,
E-Mail: Jaffnacity@hotmail.com
(சி/553608)

### தவறிவிட்டது

விக்கினேஸ்வரன் திருவரதன் என்பவருடைய தே.அ.அட்டை (863404576V) அளவெட்டி மேற்கு, டச்சு றோட் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **ரூபன் பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி.
(சி/553666)

### வாழ்த்துகின்றோம்!!

பாடசாலைகள், கல்லூரிகளை சர்வதேச வலைப்பின்னலுடன் (Internet)இணைக்கும் எமது செயற்றிட்டத்தில் 25.06.2008 முதல் www.jaffnahlc.org எனும் இணையத்தள முகவரியில் யாழ் இந்து மகளிர் கல்லூரி இணைந்துள்ளமையையிட்டு எமது நிறுவனத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :-
**UNI TECHNOLOGY**
Web Site Designing And Development Division
Manipay T.P:- 060 - 221 - 6433/ 0777-110862
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னுத்துரை அன்னபரிபூரணம்

மாவிட்டபுரம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொழும்பு, கொக்குவில் தற்போது யாழ்ப்பாணம், அத்தியடியில் வசித்தவருமான பொன்னுத்துரை அன்னபரிபூரணம் நேற்று (08.07.2008) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் பெரியதம்பி, கனகரத்தினம், கந்தையா, காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அருமைச் சகோதரியும் இரத்தினபாலசிங்கம் (கனடா), மங்கையர்க்கரசி (கொழும்பு), வரதலட்சுமி (யாழ்ப்பாணம்), ஜெயபாலசிங்கம் (அபுதாபி), அன்னலட்சுமி (சுவிஸ்), தனலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயும் காலஞ்சென்ற தவநாயகம் மற்றும் சறோஜினிதேவி (கனடா), புவனேந்திரன் (மாவை- யாழ்ப்பாணம்), தயாபதி (லண்டன்), மனோகர் (சுவிஸ்), குகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் அஜந்தா (கனடா), மகிந்தன் (B.Sc, MBA Appalo Hospital - கொழும்பு), தர்ஷினி (கொழும்பு), செந்தில்ரூபன் (Computer Engineer - கொழும்பு), நந்தினி (யாழ். மருத்துவபீட இறுதியாண்டு மாணவி), நிருஜா (லண்டன்), காலஞ்சென்ற ஜெயபிரசாந், மதுமிதா (B.Sc, Bio Tech- இந்தியா), நிவேதிகா (சுவிஸ்), சகாணா (சுவிஸ்), சந்தோஷ் (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*102, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**சோ.புவனேந்திரன் (மருமகன்).**
(76113)

## 13ஆம் ஆண்டில் நீங்கா நினைவில்...



செல்வி
ஹேமலதா செல்வராஜா
**G.N- J/134**
**Navaly North**

*இவர்களுடன் மரணித்த 147 பேர் நினைவாக.*

HSCMF,
*நவாலி.*

**குடும்பத்தினர்.**
(சி/553658)


கம்பனிக் கணக்குகளையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

**ACCPAC + QuickBooks Premier + MYOB**

ஆகிய முன்னணி **Accounting Software**களூடாக கற்பிக்கப்படும்

Course Contents:
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation
*(Including VAT)*
Stock Control
Bank Reconciliation

கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போரும் கற்று முடித்தவர்களும் வெளிநாட்டில் கணக்கியல் துறையில் வேலை எதிர்பார்த்திருப்போர் கணக்கியல் துறையில் வேலைசெய்து கொண்டிருப்போரும் இக் கற்கைநெறியை பயிலலாம்.

ஆரம்பம்

| Week Day Batch: | WeekendBatch: |
|---|---|
| 10/07/2008 -09AM | 12/07/2008 -3PM |
| 15/07/2008 -09AM | 13/07/2008 -2PM |

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 0777-222422


## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 09.07.2008 - 23.07.2008 பி.ப. 2 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 24.07.2008 நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி : 24.07.2008 பி.ப. 1மணி

| வேலை விவரம் | இக்ராட் பதிவு தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| பொலிகண்டி உப்புக் கிணற்றடி வீதி திருத்தம் | M9 | 4825.00 | 690.00 |
| அளக்கடவை வீதி திருத்தம் | M9 | 3065.00 | 690.00 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவத்தின் மூலப் பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து ***"செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை"*** என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலமும் 2ஆவது பிரதியை "பிரா/உ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் அனுப்புதல்வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கு.அரிர்தலிங்கம்**
*செயலாளர்,*
*நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.*
(சி/553664)


புலமைப்பரிசில் திட்டம் 2008

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Honours Diploma in Computer Science | 5 Months | ~~13,000~~ | 2,600 |
| Diploma in Web page Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Graphic Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Desktop Publishing | 4 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in AutoCAD | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Microsoft Office | 3 Months | | 1,500 |
| Accounting Package | 3 Months | ~~10,750~~ | 2,150 |

80% OFF

மாணவர் நலன்கருதி Lab இனையும் இணைத்துள்ளது

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |

ஆரம்பம்:
11/07/2008 - 09 or 02
12/07/2008 - 09 OR 01
13/07/2008 - 09 OR 01
14/07/2008 - 09PM
16/07/2008 - 02PM

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள் கிரிக்கெட் ஆட்டம்

# கொக்குவில் இந்துக் கல்லூரியை வென்றது சென்.பற்றிக்ஸ்
# அரைச்சதம் அடித்து 3 விக்கெட்டைக் கைப்பற்றி அசத்தினார் கவாஸ்கர்


கவாஸ்கர்

யாழ்ப்பாணம்,ஜூலை9

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் வீரர் கவாஸ்கர் 51 ஓட்டங்களைப் பெற்று அரைச்சதம் போட்டு, 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைச் சாய்த்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கவாஸ்கர் மூன்று நான்குகள் ஒரு ஆறு உட்பட 51 ஓட்டங்களையும் ரியூடர் இரண்டு நான்குகள், நான்கு இரண்டுகள் உட்பட 22 ஓட்டங்களையும் கிளின்ரன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 35 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சங்கீத் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 35 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் செந்தூரன் 04 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பங்கஜன் 09 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் திவாகரன் 07 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் தருஜன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 43.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

சதுர்சன் இரண்டு நான்குகளும் ஐந்து இரண்டுகள் உட்பட 27 ஓட்டங்களையும் பங்கஜன் 23 ஓட்டங்களையும் பெற்றார்கள். உதிரிகளாக 52 ஓட்டங்கள் பெறப்பட்டன.

கவாஸ்கர் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் அஜித்டாவின் 05 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் றோபேட் 9.3 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிதர்சன் 04 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சுகிர்தன் 07 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)


யாழ்.பிரதேச செயலகப் பிரிவின் யாழ்.நகர் மேற்கு வலயத்தின் சமுர்த்தி விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ போட்டியொன்றில் வெற்றியீட்டியவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# மாத்தளையில் தேசிய மட்ட வலைப்பந்தாட்டம்; 12 பேர் கொண்ட யாழ்.அணியும் பங்கேற்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை9

மாத்தளையில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற 12 பேர் கொண்ட யாழ்.மாவட்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய மாவட்ட மட்டப் போட்டிகளில் இருந்து தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

முதல் சுற்றில் 30 வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டு, இரண்டாம் சுற்றில் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு, இறுதிச் சுற்றில் 12 பேர் மாவட்ட அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஜே.எப்.எ.ரூபசிங்கம் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

பிருந்தா சோமசுந்தரம் (அணித்தலைவர் - சண்டிலிப்பாய்), மயூரி கந்தசாமி (உதவி அணித் தலைவர் - நல்லூர்), வத்சலா (தெல்லிப்பழை), நிலானி குணராசா (தெல்லிப்பழை), மைதிலி இராஜரெட்ணம் (தெல்லிப்பழை), அபிதா சிவசூரியர் (உடுவில்), தயாளினி செபமாலை (உடுவில்), மேனகா அமிர்தலிங்கம் (உடுவில்), மேனகா சிதம்பரநாதன் (சண்டிலிப்பாய்), ஸ்ரீசக்தி சந்திரசோதி (சங்கானை), நிசாந்தினி குணசேகரம் (உடுவில்), வி.வினோஜா (நல்லூர்).

இலங்கை தேசிய விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் சார்பாக பங்குபற்ற இந்த அணி இந்த வாரம் மாத்தளை செல்லவிருக்கிறது. (1-86)

# தீவகக் கழகங்கள் உதைபந்தாட்டத்தில் மெலிஞ்சிமுனையை வென்றது தம்பாட்டி

ஊர்காவற்றுறை,ஜூலை9

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி வி.க. வெற்றி பெற்றுச் சம்பியனானது.

ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி மைதானத்ததில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி வி.கவும் மெலிஞ்சி முனை இருதயராஜா வி.கவும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டன. முதல்பாதி ஆட்டத்தில் இவ்விரு அணிகளும் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தத முடியாமையினால் கோல்கள் எதுவும் பெறப்படவில்லை.

இரண்டாவது பாதியாட்டம் தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளுமே மாறி மாறி தொடர்ச்சியான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டனர். ஆட்டம் முடிவடையும் நேரத்தில் தம்பாட்டி காந்திஜி அணி மிகவும் துல்லியமான முறையில் பந்தை நகர்த்தி இலகுவான ஒரு கோலை போட்டு வெற்றியைத் தம தாக்கிக்கொண்டது.

இந்த வெற்றியின் மூலம் தீவகப் பிரதேச சம்பியனாக தம்பாட்டி காந்திஜி தெரிவானது. (1-325)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### அராலியில் இன்று அரையிறுதி ஆட்டம்

வலி.வடக்கு,ஜூலை9

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தி வரும் 07 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* *காட்சி ஆட்டம்* - அராலி ஜேம்ஸ் வி.க. எதிர் அராலி ஐக்கிய வி.க.
* *அரையிறுதி ஆட்டம்* - அராலி ஏ.எல். வி.க. எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் வி.க. (1-86)

# மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு காங்கேசன் - யூனியன்ஸ் இறுதியாட்டத்தில்!

வலி.வடக்கு,ஜூலை9

யாழ்.மாவட்ட வலைபந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

போட்டிகள் அனைத்தும் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் இறுக்கமாகவும் ஓர் அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் விளையாடின.

இரண்டாம் பாதி ஆட்டம் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கு சாதகமாகவும் கூடிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றதை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 26:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் பல்கலைக் கழக அணியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இந்த இரு அணிகளும் ஓர் அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் இல்லையென்பதை பல தடவைகள் பல போட்டிகளிலும் நிரூபித்துள்ளார்கள்.

இதற்கு ஏற்ப இறுதிப் போட்டிகள் பலவற்றில் இந்த இரு அணிகளும் மோதிக்கொண்டு மாறி மாறி சம்பியன் கிண்ணங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் போட்டி ஆரம்பமாகி முடியும்வரை மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 28:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (1-86)

# உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் இராமலிங்கம் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஜூலை9

இணுவில் ஐக்கிய சமூக விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வைத்தியர் சு.இராமலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகமும் மோதின.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று திருக்குமரன் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வெற்றி பெற்ற அணிக்கு கேடயம் வழங்கினார்.


கடந்த ஒரு மாதமாக இடம்பெற்ற இச் சுற்றுப்போட்டியில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கழகங்கள் பங்குபற்றின. (1)

# பாடசாலைகள் கிரிக்கேட் ஆட்டங்களில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை9

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் இன்று மோதும் அணிகள் வருமாறு:

* *மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதா னம்* - மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'எ' அணி.
* *யாழ்.மத்திய கல்லூரி மைதானம்* - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
* *சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்*- யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.
* *கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம்* - அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* *யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்* - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் சுன் னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
* *யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்* - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
* *யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்* - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி எதிர் சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி. (1-86)



இணுவில் மத்திய சமூக விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்டத்தில் சம்பியனான உரும்பிராய் திருக்குமரன் வி.கவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேடயம் வழங்குவதையும் அவர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கடை இடமாற்றமும்

# திறப்பு விழாவும்

தற்பொழுது இலக்கம் 336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கும் **சிறிமுத்து மாரி அம்மன் பல்பொருள் வாணிபம்** இன்று (09.07.2008) புதன் கிழமை காலை 9.30 தொடக்கம் 10.30 மணிவரையான சுப முகூர்த்த வேளையில் புதிய பொலிவுடன் இலக்கம் 342, 344, 346, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சுற்று அருகாமையில்) என்னும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

*திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

எமது வியாபார நிறுவனத்தில் சகல விதமான பல சரக்குப் பொருள்கள் மற்றும் தானிய வகைகள், எண்ணெய்வகைகள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் உரிய தரத்துடன் உடனுக்குடன் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**எமது வியாபார நிலையம் மேன் மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துபவர்கள்:**

- A.M.T.ஸ்தாபனத்தினர்
- S.V.M.வியாபார நிறுவனத்தினர்
- அம்பிகை வியாபார நிறுவனத்னர்
- அம்பாள் ஸ்ரோர்ஸ் நிறுவனத்தினர்
- சிவா ரேடிங் கொம்பனி
- கஜசக்தி (Pvt) Ltd

*உரிமையாளர்களும் ஊழியர்களும்*

## சிறிமுத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்

## Sri Muthumari Amman Traders

இல. 342, 344, 346, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

## அமரர்

## இராசா நேசரெத்தினம்

அன்னை மடியில் 02.02.1938 ஆண்டவன் அடியில் 10.06.2008



10.06.2008 செவ்வாயன்று சிவபதமடைந்த அமரர் இராசா நேசரெத்தினம் (கிளி அண்ணா) அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (10.07.2008) வியாழக்கிழமை காலை எமதில்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி,
தொண்டைமானாறு.

மனைவி
(வசந்தா),
குடும்பத்தினர்.

(சி/553601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை வினாத்தாள் - ஓகஸ்ட், 2008

# இரசாயனவியல் - 01

ஆசிரியர் :- திரு.S.தில்லைநாதன்

*(04.07.2008இல் வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி)*

வினா 51 முதல் 60 வரை வழிகாட்டல் அட்டவணை

| விடை | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை முதலாம் கூற்றின் தகுந்த விளக்கம் |
| 2 | உண்மை | உண்மை ஆனால் முதற்கூற்றின் விளக்கமல்ல |
| 3 | உண்மை | பொய் |
| 4 | பொய் | உண்மை |
| 5 | பொய் | பொய் |

| | | | |
|---|---|---|---|
| 51. | $100^{0}C$ இற்கு மேல் நீரை திரவநிலையில் பேணமுடியாது | ஏனெனில் | $100^{0}C$ யில் நீரின் நிரம்பலாவியமுக்கம் 760 torr |
| 52. | பென்சிற்கரியினை வைரமாக மாற்றல் இலகுவானதல்ல | " | பென்சிற்கரியினை வைரமாக மாற்றல் உயர் அக வெப்பத்திற்குரியது |
| 53. | $Mg^{+}(g)$ இலும் $Mg^{2+}(g)$ ஆனது உறுதியானது | " | $Mg^{2+}$ சடத்துவ வாயு அமைப்புடையது |
| 54. | பீனோலிலிலும் பார்க்க கிரசோல் அமில இயல்பு குறைந்தது | " | பீனொக்சைட்டு அயனிலும் பார்க்க கிரசோலின் பீனொக்சைட்டு உறுதி குறைவு |
| 55. | குளோரோபென்சீன் இலகுவில் நைத்திரேற்றப்படுவதில்லை | " | குளோரின் ஓதோ , பரா வழிகாட்டி |
| 56. | பென்சீனில் $CH_3COOH$ ஆனது இருபகுதியாாக அமையும் | " | $CH_3COOH$ மூலக்கூறுகளை ஐதரசன் பிணைப்பு இணைத்து வைக்கிறது |
| 57. | NaCl(aq) மின்பகுப்பில் Hg கதோட்டில் Na+ இறக்கமடையும் | " | Hg கதோட்டில் H+ இன் இறக்கம் அழுத்த உயர்வு |
| 58. | சவர்க்காரம் கடல்நீரில் நுரைப்பது இல்லை | " | கடல்நீரில் கணிசமான அளவு NaCl உண்டு. |
| 59. | ஒரே வெப்பநிலையில் இரு இலட்சிய வாயுக்களின் வேகவர்க்க இடை சமம் | " | ஒரு இலட்சிய வாயுவின் வேகவர்க்க இடை தனி வெப்பநிலைக்கு நேர்விகித சமம். |
| 60. | $CH_3CONH_2$ உடன் $P_2O_5$ தாக்கமுறாது. | " | $CH_3CONH_2$ மூல இயல்புடையது. |

## பகுதி - II, A - அமைப்புக்கட்டுரை

எல்லா வினாக்களுககும் விடை தருக

01. (a) Na,Al,Cl,Sc,Fe,Zn,Cr,S ஆகிய மூலகங்களின் பட்டியலிலிருந்து பின்வரும் இயல்புகட்கு பொருத்தமான மூலகங்களை இனங் காண்க.

(i) +3 ஒட்சியேற்ற நிலையை மட்டும் (உறுதியான) காட்டும் மூலகம் / மூலகங்கள்

..........................................

(ii) +6 ஒட்சியேற்ற நிலையில் ஒட்சைட்டுக்களை உருவாக்கக் கூடிய மூலகம் / மூலகங்கள்

..........................................

(iii) மூலமொன்றில் அதியுயர் ஒட்சியேற்ற நிலையிலுள்ள அதன் அயன் கரைசலுக்குள் அம்மூலகத்தைச் சேர்க்கும்போது குறிப்பிடத்தகு அவதானமொன்றை தருவதான மூலகம்

..........................................

(iv) NaOH(aq) உடன் தாக்கமுற்று வாயு வெளியேற்றத்தை தருவதுடன் அவ்விளைவுக் கரைசலில் +2 நிலையில் அம்மூலகத்தை உடைய சேர்வையை தரும் மூலகம்.

..........................................

(v) +1 நிலையில் ஒட்சைட்டுக்களை தரக்கூடிய மூலகம் / மூலகங்கள்

..........................................

(b) அணுவெண் 20 இலும் குறைந்த இரு மூலகங்கள் W,X இரண்டும் NaOH(aq) உடன் தனித்தனி தாக்க முற்று முறையே வாயுக்கள் Y, Z இனைக் கொடுக்கும். வாயு Y ஆனது X உடன் வெடித்தலுடன தாக்கமுற்று சேர்வை $C_1$ ஐக் கொடுக்கும். வாயு Z இனை நீரில் சேர்க்கும் போது கரைந்து ஒரு அமிலக் கரைசல் $S_1$ இனையும் வாயு A யினையும் கொடுக்கும். கரைசல் $S_1$ உடன் W ஆனது தாக்கமுற்று ஒரு அயன் சேர்வை $C_2$ இனைக் கொடுத்தது. மூலகம் X ஆனது NaOH(aq) உடன் தாக்கமுற்று கொடுத்த கரைசல் $S_2$ ஆனது $CaCl_2(aq)$ உடன் வெண்ணிற வீழ்படிவு $C_3$ ஐ தரும். எனில் இங்கு குறிப்பிட்டவற்றை உண்மையான இரசாயனக் குறியீடுகளால் இனங்காட்டுக.

(i)

| W | X | Y | Z |
|---|---|---|---|
| | | | |

| $S_1$ | $S_2$ | $C_1$ | $C_2$ |
|---|---|---|---|
| | | | |

| $C_3$ | A |
|---|---|
| | |


(ii) NaOH உடன் மூலகம் X இன் தாக்கத்தின் ஈடுசெய்த சமன்பாட்டை மட்டும் தருக.

..........................................

(iii) மூலகம் W இன் குளோரைட்டின் புள்ளி - புள்ளடி இலத்திரன் கட்டமைப்பு யாது?

(c) மூலகம் 'N' இன் ஒட்சைட்டுக்களைப் பற்றியது இவ்வினாவாகும்.

(i) +4,+2 ஆகிய இரு நிலைகளிலும் ஒவ்வோர் நைதரசன் அணுவை உடைய அதன் ஒட்சைட்டு ஒன்றின் உறுதியின் கட்டமைப்பைத் தருக.




(ii) சராசரியாக +1 நிலையில் ஒட்சைட்டை உடைய நைதரசனின் ஒட்சைட்டு ஒன்றில் ஏற்றுக கொள்ளத்தக்க இரு உறுதியின் கட்டமைப்புகள்

02. (a) நீறிய சுண்ணாம்புடன் முரண் தொடுகை முறையில் $Cl_2(g)$ தாக்கமுறச் செய்தபோது பெறப்பட்ட விளைவில் Ca = 34.68% , Cl = 41.04% , O = 23.52% , H = 1.16% காணப்பட்டன. விளைவுப்பதார்த் தத்தின் மூலர்த்திணிவு $346gmol^{-1}$

(i) விளைவின் அனுபவ சூத்திரத்தைக் காண்க.

..........................................

..........................................

..........................................

(ii) விளைவுப் பதார்த்தத்தை அமிலமாக்கியபோது $Cl_2$ வாயு வாளிப்பட்டது. ஒரு மூல் பதார்த்தம 2mol $Cl_2$ வாயுவைத் தந்தது. மேலும் விளைவானது $OCl^-$, $Cl^-$, $OH^-$ அயன்களையும் பளிங்கு நீரையும் கொண்டமை அறியப்பட்டது. எனின் விளைவுக்கு ஒரு சூத்திரத்தைத் தருக.(இது தூய சேர்வை அல்ல)

..........................................

..........................................

..........................................

(b) $I_2$ ஆனது $Cl_2$ உடன் தாக்கத்தில் ஈடுபடும்போது $HIO_3$ உம் HCl உம் விளைபொருட்களாகும் இங்கு $H_2O$ உம் ஒரு தாக்கு பொருளாகும். எனில் பின்வருவனவற்றினைத் தருக.

(i) ஒட்சியேற்றத்தைக் குறிக்கும் அரைஅயன் சமன்பாடு

..........................................

(ii) தாழ்த்தலைக் குறிக்கும் அரைஅயன்சமனபாடு.

..........................................

(iii) தாக்கத்தின் பீசமானம்

$Cl_2 : I_2 : H_2O$ = ________ : ________ : ________

(c) $E^{\ominus}_{Ni^{2+}/Ni} = -0.25V$ , $E^{\ominus}_{Cd^{2+}/Cd} = -0.40V$ என்க

எனில் இவற்றினால் ஆக்கப்படும் நியம மின்னிரசாயன மின்கலமொன்றைக் கருதுக.

(i) கலத்தின் அனோட்டு யாது? ..........................................

(ii) கலத்தின் கதோட்டு யாது? ..........................................

(iii) அனோட்டுத் தாக்கம் யாது? ..........................................

(iv) கதோட்டுத் தாக்கம் யாது? ..........................................

(v) கலத்தின் IUPAC குறிப்பீடு யாது? ..........................................

(vi) கலத்தின் நியம மின்னியக்க விசை யாது? ..........................................

(vii) $Ni^{2+}$ அயன் செறிவு 2M ஆக பயன்படுத்தப்படின் கலத்தின் மின்னியக்கவிசைக்கு யாது நிகழும் என பண்பறி ரீதியில் விளக்குக.

..........................................

..........................................

..........................................


..........................................

..........................................

..........................................

..........................................


3. (a) பின்வரும் சேதனப்பதார்த்தங்களைக் கருதுக.

(i) சக்கர எடசீன் (ii)  CHO (iii) KCN (iv) $H_2SO_4$(dil)

(v) $C_6H_5CH_2Br$ (vi) $CH_3CHBr.CH_3$ (vii) KOH (viii) நீர்

(ix) $C_2H_5OH$ (x) $Br_2$ (xi) உலர் $AlCl_3$

இவற்றிலிருந்து பின்வரும்வகை தாக்கம்வகைக்குரிய தாக்கிகள், சோதனைப் பொருட்களையும தாக்கத்தில் தாக்கமடையும் முதலாவது தாக்க இனத்தையும் தருக. இங்கு உமக்கு ஓர் உதாரணம் தரப்பட்டுள்ளது. ஒரு வகைக்கு ஓர் உதாரணம் போதுமானது.

| தாக்கவகை | தாக்கி | சோதனைப் பொருள் | தாக்கும் முதலாவது இனம் |
|---|---|---|---|
| (i) இலத்திரன் நாட்டப்பிரதியீடு |  CHO | $Br_2$/உலர் $AlCl_3$ | $Br^+$ |
| (ii) கருநாட்டப் பிரதியீடு | | | |
| (iii) இலத்திரன்நாட்டக் கூட்டல் | | | |
| (iv) கருநாட்டக்கூட்டல் | | | |
| (v) சுயாதீன மூலிக பிரதியீடு | | | |
| (vi) நீக்கல் தாக்கம் | | | |


*(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 மாணவர்களுக்காக
## ஆசிரியர் பி.அம்பிகைபாகன் தொகுத்து வழங்கும்
## புலமை இலகுவழி பயிற்சிப்பரீட்சை

வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. தரம் 05 இன் முதலாம் தவணைப்பரீட்சைக்குத் தோற்றிய 4 பிள்ளைகள் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகளைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது. 4 பிள்ளைகளும் 5 பாடங்களிலும் பெற்ற புள்ளிகள் குறியீடுகள் மூலம் காட்டடப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டு உருவத் திற்கும் உரிய புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.




01. ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) ரூபன். 2) செந்தாமரை. 3) ஜனனி (................)

02. 4 பிள்ளைகளும் பெற்ற புள்ளிகளில் ஆகக்கூடிய மொத்தப்புள்ளிகள் எந்தப் பாடத்திற்குப் பெறப்பட்டன?
1) பாடம் 5 இற்கு. 2) பாடம் 4 இற்கு. 3) பாடம் 2 இற்கு. (................)

03. இரு பாடங்களுக்கு 100 வீத புள்ளிகள் பெற்ற இருபிள்ளைகள் யாவர்?
1) ரூபன், செந்தாமரை. 2) செந்தாமரை, ஜனனி.
3) ஜனனி, திலீபன். (................)

கீழே தரப்பட்டுள்ள இரு பாடல்களையும் வாசித்து வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து எழுதுக.

உம்மைப் போன்ற சிறுவர்கள்
களிப்புடனே கல்விகற்று
ஞானம் பண்பு வளரப்பெற்று
உழைத்திடுவார் நாட்டினுக்கு

எங்கும் என்றும் கல்வி கற்றல்
மங்காத சுகவாழ்வின் ஆதாரம்
இவ்வுலகில் இதற்கு நிகர் வேறு
எதுவுமில்லை எவர்க்குமே.

04. 'ஞானம் பண்பு வளரப்பெற்று' என்பதன் பொருள் யாது?
1) அறிவும் நற்பழக்கவழக்கங்களும் மேம்படுதல்.
2) இல்லாத குணங்களைக் காட்டுதல்.
3) அறிவைவிட நற்பழக்கங்கள் மேம்படுதல்.

05. மங்காத சுகவாழ்வின் ஆதாரமாக அமைவது யாது?
1) சிறுவர்கள். 2) கற்றல். 3) ஞானமும் பண்பும்.

வினாக்களுக்குரிய சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
ஒரு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஐந்து பாடசாலைகளிலிருந்து ஒரு பரீட்சை நிலையத்திற்கு வந்திருந்த மாணவர்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| | சிங்கள மொழி மூலம் | | தமிழ் மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| பாடசாலை | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| பராக்கிரம | 72 | 68 | - | - |
| கைமுனு | 122 | - | - | - |
| இந்து | - | - | 33 | 25 |
| மக்ரே | 66 | 59 | 31 | 30 |
| சரஸ்வதி | - | - | - | 70 |

06. சிங்கள மொழிமூல மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

07. மக்ரே பாடசாலையில் இருந்து வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

08. சிங்கள மொழிமூல மாணவர்களுக்கும் தமிழ் மொழிமூல மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு? ..............................

09. விடைகளை எழுதுவதற்கு ஆரம்பத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் ஐந்து கடதாசிகள் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது. தமிழ் மொழிமூல மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடதாசிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

10. ஒரு வகுப்பறையில் அமரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 20 இற்கு மேற்படக்கூடாதெனவும், ஒரு மொழிமூல மாணவர் மட்டுமே ஒரு வகுப்பறையில் அமர வேண்டும் எனவும் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. சிங்கள மொழிமூல மாணவர்களுக்குத் தேவையான வகுப்பறைகள் எத்தனை? ..............................

11. இந்த உருவங்களுள் அமுதனின் உருவத்தைத் தெரிவு செய்யவும்.
- அமுதன் சிரித்தபடி இருப்பான்.
- அமுதன் தலைமயிரை நடுவகிடிட்டு இருப்பான்.
- அமுதனின் மேல்வாய் முன்பல் விழுந்துள்ளது.
- அமுதனின் முகத்தின் இடதுபக்கத்தில் ஒரு மச்சம் உள்ளது.


01 02 03 04 05


12. இந்த உருவங்களுள் கல்பனாவின் உருவத்தைத் தெரிவு செய்யவும்.
- கல்பனா மயிரை நீளமாகப் பின்னியிருப்பாள்.
- கல்பனா கவலையோடு இருப்பாள்.
- கல்பனா நெற்றியில் பொட்டு வைத்திருப்பாள்.
- கல்பனா மயிரை நடுவகிடிட்டு இருப்பாள்.



01 02 03 04 05

13. இந்த உருவங்களுள் ஹனீபாவின் உருவத்தைத் தெரிவு செய்யவும்.
- ஹனீபாவின் தலையில் மயிர் இல்லை.
- ஹனீபா நீண்ட நாடியை உடையவன்.
- ஹனீபா மகிழ்ச்சியோடு இருப்பான்.
- ஹனீபாவின் காதுகள் சிறியவை.


01 02 03 04 05

வினாக்களில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவை வலது பக்கத்தில் தரப்பட்டுள்ள உருக்களில் இருந்து தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

14.



15.



பின்வரும் A, B, C, D என்ற அடைப்புகளுக்குள் சில பழங்களும், சில காய்கறிகளும், சில இனிப்புப் பண்டங்களும், சில பான வகைகளும் காணப்படுகின்றன. இதற்கேற்ப வினாக்களுக்கு விடை எழுதுக.

| A | B | C | D |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | பாகற்காய் | அப்பிள் | கோவா |
| விசுக்கோத்து | போஞ்சி | கொக்கீஸ் | விளாம்பழம் |
| மாம்பழம் | கேக் | கரட் | பால் |
| பப்பாசி | தோடம்பழம் | முள்ளங்கி | அன்னாசி |
| நீர் | கோப்பி | அதிரசம் | லீக்ஸ் |

16. இந்த அடைப்புகளிடையே இரண்டு காய்கறிகள் வீதம் உள்ள மூன்று அடைப்புக்களும் எவை?
1) A, B, C 2) B, C, D 3) A, B, D

17. இந்த அடைப்புகளிடையே இரண்டு பழங்கள் வீதம் உள்ள இரண்டு அடைப்புக்களும் எவை?
1) A உம், D உம். 2) B உம், C உம். 3) C உம், D உம்.

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்கள் யாவை?

18.
```
 4  5  7      1) 2     2) 1     3) 1
 3 ....  4       3        3        6
 1 ....  3
```

19.
```
 8  4  6      1) 5     2) 4     3) 3
 1 ....  2       9        6        1
 9 ....  8
```

ஒரு வாக்கியத்தை அல்லது பந்தியை வாசித்து அதனுள் மறைந்துள்ள காரியத்திற்கான காரணத்தை இனங்காணல்.
சரியான விடைக்குரிய எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

20. வெள்ளம் ஏற்படும்போது வியாபாரிகள் பொருட்களின் விலைகளை உயர்த்துகின்றனர். வியாபாரிகளின் இச்செயல் எதற்கு ஒப்பாகும்?
1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல் என்பதற்கு.
2) எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்பதற்கு. (................)

21. தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதன் கருத்து?
1) ஒருவர் தான்செய்த செயலின் பயனை அனுபவிப்பார் என்பதாகும்.
2) முயற்சி திருவினையாக்கும் என்பதாகும். (................)

22. இலங்கையில் பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிக்கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்.
1) மக்கள் விவசாயத்திற்காக அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றமை.
2) மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை. (................)

23. சிறு பிள்ளைகள் மூத்தவர்கள் சொற் கேட்கவேண்டும். இதற்குக் காரணம்.
1) சிறுபிள்ளைகள் நல்லவை தீயவை யாவை என்று அறிந்திராமை. (................)
2) மூத்தவர்கள் சிறு பிள்ளைகளிலும் வயது கூடியவர்களாக இருக்கின்றமை.

24. ஒரு பிச்சைக்காரன் தெருவோரத்தில் படுத்திருக்கிறான். இதற்குக் காரணம் யாது?
1) அவன் சுகவீனமுற்று இருத்தல் கூடும்.
2) அது அவனுக்குச் சௌகரியமான இடமாக இருத்தல் கூடும். (................)

பின்வரும் வினாக்களில் இரு சம்பவங்கள் தொடர்பான உரையாடலின் ஒழுங்கு மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த உரையாடல்களை ஒழுங்குமுறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடைக்குரிய இலக்கங்களை எழுதுக.

25. ஒரு குழந்தை சுகவீனமுற்றபோது அவனுக்கு மருந்து எடுத்துவந்துகொடுத்த சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்,
1) மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்துச்செல்வோம்.
2) பிள்ளைக்கு நல்ல காய்ச்சல் இம்மருந்தைக் கொடுங்கள். விரைவில் குணம் அடையலாம்.
3) இப்போது உடல் நடுங்குவது சிறிது குறைந்துள்ளது.
4) கசப்பு ஆனாலும் பரவாயில்லை. மருந்து முழுவதையும் குடி.
5) மகனுக்குக் காய்ச்சல் போலுள்ளது. (..........................)

26. ஆசிரியை பிள்ளைகளிடம் குமிழ்முனைப்பேனையினால் எழுதவேண்டாம் எனக் கட்டளையிட்ட சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்,
1) அப்படியானால் உங்களின் கையில் பேனை இருப்பது ஏன்?
2) எங்களைக் குமிழ்முனைப்பேனையினால் எழுத வேண்டாமென ஆசிரியை கூறினார் அல்லவா?
3) நான் பென்சிலைத் தருகிறேன்.
4) ஆம் எழுத்துக்கள் அழகில்லாது போகும் என்பதால் பென்சிலால் எழுதும்படி ஆசிரியை கூறினார்.
5) நான் இன்று பென்சிலைக் கொண்டுவர மறந்துவிட்டேன். (..........................)

27. பின்வரும் வினாக்களின் வெற்றிடங்களுக்கு நன்கு பொருந்தக்கூடிய சொல்லின் கீழே கோடிடுக.
மிகவும் ...01 ... மரணமடைந்த ...02 ... நிலை எல்லோரின் மனதையும் ...03 ...வைத்தது.

| 01 | 02 | 03 |
|---|---|---|
| 1) கவர்ச்சியாக | 1) பிச்சைக்காரனின் | 1) கலங்க |
| 2) கவலைக்கிடமாக | 2) குழந்தையின் | 2) நடுங்க |
| 3) மகிழ்ச்சியாக | 3) கட்டியக்காரனின் | 3) வியக்க |

28. ......01....... காட்டின் மத்தியில் பயணம் சென்ற ..... 02 .... தனக்கு ...... 03 ..... வந்த கரடியை


| 01 | 02 | 03 |
|---|---|---|
| 1) பெரிய | 1) சங்கீத வித்துவான் | 1) நேருக்குநேராக |
| 2) அகன்ற | 2) வேட்டைக்காரன் | 2) எதிரெதிராக |
| 3) செழுமையான | 3) தூதுவன் | 3) நிழலின் கீழ் நோக்கித் துப்பாக்கியினால் குறி வைத்தான். |

மழை நாள் ஒன்றிலே நீர் காணக்கூடியவற்றைத் தெரிவு செய்து அவற்றைத் தரப்பட்டிருக்கும் புள்ளிக் கோடுகள் மீது எழுதுக.
1) மக்கள் குடைகளை ஏந்திச்செல்லுதல். 4) சேற்று மயமான வீதிகள்.
2) வெடித்துப் பிளந்து காணப்படும் தரை. 5) வெப்பம் மிகுந்த சூரிய ஒளி.
3) பட்டங்கள் பறத்தல்.

29. ..............................................................................................
30. ..............................................................................................
31. ..............................................................................................

பின்வரும் உரு படம் நகரங்கள் சிலவற்றைத் தொடுக்கும் வீதிகளின் ஒருதொகுதியைத் தருகிறது. நகரங்கள் ஆங்கில எழுத்துக்களால் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

32. D யிலிருந்து E யை நோக்கிச் செல்லும் வீதி எத்தனை கிலோமீற்றர் நீளம் ஆகும்? ..........................




33. A யிற்கும் B யிற்கும் இடையிலான தூரமும், E யிற்கும் F இற்கும் இடையிலான தூரமும் சமமானவையா? ..........................

A, B, C, D, E ஆகிய நகரங்கள் அமைந்திருக்கும் விதம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. அதை வாசித்து விளங்கி அதன் கீழுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

**A, B நகரங்கள் இரண்டுக்கும் சரி நடுவே D நகரம் அமைந்துள்ளது.**
**E நகரம் A, B நகரங்களுக்கிடையே அமைந்துள்ளது.**
**A, E நகரங்கள் இரண்டுக்கும் சரி நடுவே C நகரம் அமைந்துள்ளது.**

34. மேலே தரப்பட்ட விவரங்களின்படி சரியான கூற்று எது?
1) A, B நகரங்களுக்கிடையான தூரத்தை விட A, D நகரங்களுக்கிடையிலான தூரம் அதிகம்.
2) C நகரத்துக்கு மிக அருகில் இருப்பது A நகரம் அல்ல B நகரம்.
3) D நகரத்துக்கு மிக அருகில் இருப்பது E நகரம் அல்ல B நகரம்.

35. மேலே கூறப்பட்ட விவரங்களின்படி பிழையான கூற்று எது?
1) A, D நகரங்களுக்கிடையில் உள்ள தூரமும் D, B நகரங்களுக்கு இடையில் உள்ள தூரமும் சமமானதாகும்.
2) [illegible] நகரங்களுக்கிடையில் உள்ள தூரமும் D, B நகரங்களுக்கு இடையில் உள்ள தூரமும் சமன்.
3) A, C நகரங்களுக்கிடையில் உள்ள தூரமும் C, E நகரங்களுக்கு இடையில் உள்ள தூரமும் சமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி, வாரிவனம்

# திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில்

சுந்தர பஞ்சதள இராஜகோபுர புனராவர்த்தன நவகுண்டபக்ஷ

# மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

**சர்வதாரி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் (14.07.2008) திங்கட்கிழமை மு.ப. 10.38 - 11.08 மணி**

**மெய்யடியார்களே!**

சிவபூமியின் சென்னியாம் யாழ்ப்பாணத்தின் திலகம் எனப் போற்றப்படும் தென்மராட்சியின் அரசன் சாவகச்சேரியின் சீர்மேவும் வாரிவன திருப்பதியில் பல நூற்றாண்டுகளாக எழுந்தருளி அருள் ஆட்சி புரியும் அம்மா முத்துமாரி அம்பாளிற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான பிள்ளையார், கேதாரீஸ்வரி சமேத கேதாரலிங்கேஸ்வரர், முருகன், வரலட்சுமி, காத்தவராயர் ஆகிய மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் (14.07.2008) திங்கட்கிழமை துவாதசித் திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மு.ப.10.38 மணிமுதல் 11.08 மணிவரையுள்ள கன்னிலகன சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது. அடியார்கள் அன்றும் அதற்கு முன்பும் நடைபெறும் கிரியைகளில் ஆசாரசீலர்களாக கலந்துகொண்டு திருத்தொண்டுகள் புரிந்து அம்பாளின் திருவருளைப்பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

## சிவாகம பூர்வமான கிரியா நிகழ்வுகள்

***ஆனித் திங்கள் 23 ஆம் நாள் 07.07.2008 திங்கட்கிழமை***

மாலை 6மணிமுதல் கர்மாரம்பம், விநாயக வழிபாடு, அனுஞ்ஞை, ஆச்சாரிய வர்ணம், திரவியசுத்தி,திரவிய விபாகம்.

***ஆனித் திங்கள் 24 ஆம் நாள் 08.07.2008 செவ்வாய்க்கிழமை***

காலை 8 மணி முதல் கணபதிஹோமம், நவக்கிரகமகம், பி.ப.3மணி முதல் கிராமசாந்தி, பேரீதாடனம், பிரவேச பலி, ரக்ஷோக்ன ஹோமம்.

***ஆனித் திங்கள் 25 ஆம் நாள் 09.07.2008 புதன்கிழமை***

காலை 8மணி முதல் திசாஹோமம், சக்தி ஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், ஆதித்தியாக்கினி, சங்கிரகணம், கங்கா பூஜை.

பி.ப.2மணிமுதல் அங்குரார்ப்பணம், ஆசாரிய ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், காலகர்ஷணம், க்ஷணஹோமம், அக்கினி கார்யம், நவாக்னி விபஜனம், பிரதான கும்பங்கள் யாகசாலைப் பிரவேசம், தீபாராதனை.

பி.ப. 5மணிமுதல் 6.45 மணிவரையுள்ள தனுலகின சுபமுகூர்த்த வேளையில் தூபிஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம், இரத்தினஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

***ஆனித் திங்கள் 26 ஆம் நாள் 10.07.2008 வியாழக்கிழமை***

காலை 7மணி முதல் விஷேட சந்தி, யாகபூசை, ஹோமம், மூலமந்திர ஹோமம், தீபாராதனை.

பி.ப. 3மணிமுதல் விசேடசந்தி, யாகபூசை, ஹோமம், காயத்ரீ மந்திர ஹோமம், தீபாராதனை.

***10.07.2008 வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்***
***11.07.2008 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிவரை***
**பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்**

***ஆனித் திங்கள் 27 ஆம் நாள் 11.07.2008 வெள்ளிக்கிழமை***

காலை 7 மணி முதல் விசேடசந்தி, யாகபூசை, ஹோமம், திரிசதி ஹோமம், தீபாராதனை.

பி.ப. 3 மணிமுதல் விசேடசந்தி, யாகபூசை, ஹோமம், சகஸ்ரநாம ஹோமம், தீபாராதனை.

***ஆனித் திங்கள் 28 ஆம் நாள் 12.07.2008 சனிக்கிழமை***

காலை 7 மணிமுதல் விசேடசந்தி, பிம்பசுத்தி, யாகபூசை, ஹோமம், அஷ்டோத்தரசத நாம ஹோமம், தீபாராதனை.

பி.ப. 3 மணிமுதல் விசேடசந்தி, யாகபூசை, ஹோமம், தேவீவில் வாஷ்டோத்தரசத நாம ஹோமம், தீபாராதனை.

***ஆனித் திங்கள் 29 ஆம் நாள் 13.07.2008 ஞாயிற்றுக்கிழமை***

காலை 7 மணி முதல் விசேடசந்தி, நியாசாதிகள், யாகபூசை, விசேட திரவியஹோமம், தீபாராதனை.

பி.ப. 3 மணிமுதல் விசேடசந்தி, யாகபூசை, ஹோமம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, சிவாச்சாரிய சம்பாவனை.

***ஆனித் திங்கள் 30 ஆம் நாள் 14.07.2008 திங்கட்கிழமை***

காலை 6மணிமுதல் யாகபூசை, மஹா பூரணாகுதி, விசேட தீபாராதனை, சதுர்வேத ஸ்தோத்திர திருமுறைபாராயணம், சங்ககீததாள வீணா மிருதங்க நிருத்த செகண்டி வாத்திய சமர்ப்பணம், ஆசீர்வாதம், பிரதக்ஷண நமஸ்காரம், தானாதிகள், அந்தர்பலி, பகிர்பலி, கும்பங்கள் வீதிப்பிரதக்ஷணம்.

மு.ப. 10.38 மணிக்கு இராஜகோபுர மஹாகும்பாபிஷேகமும் தூபி அபிஷேகமும் மு.ப. 10.38 - 11.08 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில மஹா கும்பாபிஷேகம், மஹாகவிர் நிவேதனம், தேவர்கள் வழிபாட்டிற்காக திருக்கதவம காப்பிடுதல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், திருமுறை ஓதி திருக்கதவம் திறத்தல், ஆசியுரைகள், மஹாபிஷேகம், மாலை விஷேட பூசையும் அம்பாள் வீதி உலா வருதலும் நடைபெறும்.

ஆலய திருப்பணியாளர்:
**திரு. வைத்திலிங்கம் சிவராசா** *(சிவா ரேடிங் கம்பனி)*, ஆலய ஆதீனகுரு:


## மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வாழ்த்துபவர்கள்

| | | | |
|---|---|---|---|
| ரூபா<br>*பன்முக வர்த்தகம்*<br>ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். | அம்பாள்<br>*ஸ்ரோர்ஸ்*<br>K.K.S. வீதி,<br>யாழ்ப்பாணம். | சிறிமுத்து மாரிஅம்மன்<br>*பல்பொருள் வாணிபம்*<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | அம்பிகை<br>*களஞ்சியம்*<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| S.V.M.<br>*பல்பொருள் வாணிபம்*<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | A.M.T.<br>*ரான்ஸ்போட்*<br>யாழ்ப்பாணம். | சிவா<br>*ரேடிங் கொம்பனி*<br>இல. 89, ஆட்டுப்பட்டித் தெரு,<br>கொழும்பு 13. | தேனு<br>*களஞ்சியம்*<br>திருநெல்வேலி. |
| யாழ்ப்பாண<br>*வணிக நிலையம்*<br>இல.302, மருத்துவமனை வீதி,<br>யாழ்ப்பாணம். | கதிரவன்<br>இரும்பகம்<br>டச்சு வீதி,<br>சாவகச்சேரி. | அம்பாள்<br>*கபே*<br>கச்சாய் வீதி,<br>சாவகச்சேரி. | கஜமுகன்<br>*காட்வெயர்*<br>149, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| சாரங்கா<br>*நகை மாடம்*<br>157/1, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | ஈசன்<br>*களஞ்சியம்*<br>கண்டி வீதி,<br>சாவகச்சேரி. | சிறிமுருகன்<br>*களஞ்சியம்*<br>424, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | வாணி<br>*ரெக்ஸ்*<br>81, பெரிய கடை,<br>யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - துர்க்காபுரம்

## ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

*ஞானதுர்க்கை அம்பாள் அடியார்களே!*

அலங்கார உற்சவம் நிகழும் சர்வதாரி வருடம் ஆனி மாதம் 26ஆம் திகதி நாளை (10.07.2008) வியாழக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை (19.07.2008) இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறுகின்றன.

9ஆம் நாள் வெள்ளிக்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்கை தேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். தினம்தோறும் மு.ப. 10 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.

இந்த உற்சவத்தில் அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞானதுர்க்கா அம்பாளின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

*இறைபணியே இன்பப்பணி.*

*பரிபாலன சபை*
துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
*மிருசுவில்,* *(76102)*

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தின ஐயா.

---



விளைவேலி- ஆதீனம்
சாவகச்சேரி- நுணாவில் மேற்கு

## மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## மகா கும்பாபிஷேகப் பெருவிழா

விளைவேலி ஆதீனம் மருதடி வீரகத்தி விநாயகர் திருக்கோயில் புனர்நிர்மாணிக்கப்பட்டு, விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார தேவர்களுக்கும் நிகழும் மங்களமிகு சர்வதாரி வருஷம் ஆனி மாதம் 30ஆம் நாள் (14.07.2008) திங்கட்கிழமை அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் மு.ப. 10.20மணிமுதல் 11.40 மணி வரையுள்ள கன்னிலக்ன சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

கும்பாபிஷேக கிரியா ஆரம்பம்:
ஆனி 25ஆம் நாள் (09.07.2008) புதன்கிழமை
ஆனி உத்தர உதயம் காலை 06.30 மணிமுதல்

எண்ணெய்க்காப்பு:
ஆனி 29ஆம் நாள் (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணிமுதல் 5 மணிவரை.

மகாகும்பாபிஷேகம்:
**ஆனி 30ஆம் நாள் (14.07.2008) திங்கட்கிழமை**
மு.ப. 10.20 மணிமுதல் 11.40

ஷெ. கும்பாபிஷேக விழாவிலும் அதற்கு முன், பின் நிகழ்வுறும் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு திருவருள்துணையுடன் வேண்டுவதுடன், ஆலயத்தில் நிகழ்வுறும் தெய்வீக திருப்பணிக்கும், கும்பாபிஷேக மகா யாக விழாவுக்கும் வேண்டிய நிதி உதவி, பொருள் உதவி வழங்கி திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

*பிரதிஷ்டா குரு:*
கலாநிதி து.க.ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P.
ஆதீன சிவாச்சாரியார்.

*ஆலய குரு:*
பிரம்மஸ்ரீ க.ஜெயந்திநாத சர்மா
நுணாவில்.

*"மருதடி விநாயகன் மலரடி தொழுதிடக்*
*கருதிய யாவும் கவின் பெற வருமே"*

(75893)

வங்கிக் க/கு இலக்கம்: 1-0073-01-8267-2
தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி.
விளைவேலி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

ஷெ. ஆலய பரிபாலன சபை
(தெய்வீகப் பணியில் உள்ள)

விளம்பர அனுசரணை:
**V.M.K. நகை மாளிகை,** யாழ்ப்பாணம், சாவகச்சேரி.
**சாயி ஸ்ரோஸ்,** மடத்தடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

---

### ஸ்ரீசாரதா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
**Dr.சி.பரராஜசேகரம் (D.A.M.) Cey.**

யாழ். 24, முனீஸ்வரன் வீதியில் முழுநேர சேவையாக ஆரம்பிக்கப்பட்டு படை, சொறி, சிரங்கு, கக்கூஸ்பற்று, எச்சிற் தழும்பு, எக்ஸிமா, சேற்றுப்புண் முதலிய தோல் வியாதிகளைக் குணப்படுத்தும்... **சிவப்பு நெய்.**

மற்றும் இளநரை, செம்படை மயிர், மயிர் உதிர்தல், கூந்தல் கருமையாக வளரும். பரிமள கூந்தல் தைலம் No-3, குழந்தைப் பிள்ளை கிரந்தி எண்ணெய் No-4, பீனிசம், தும்மல், முட்டு இளுப்பு, பீனிச தைலம் No-5

வாதரோகம், சுவாசரோகம் (ஆஸ்துமா), மாதவிடாய் கோளாறுகள் சம்பந்தமான நோய், சல அடைப்பு யாவற்றுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

(சி/553657) **சேவை நேரம்:**
*முற்பகல் 10- 1.30 மணிவரை ஞாயிறு விடுமுறை.*

---

### கட்டாக்காலி நாய்களால் பெருந்தொல்லை

சங்கானைப் பகுதிகளில் கட்டாக்காலிகளால் பெரும் சிரமம் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சந்தைப் பகுதி மற்றும் பஸ் நிலைப் பகுதிகளில் இவை அலைந்து திரிவதாகவும் நாய்க்கடிக்கு பலர் ஆளாவதாகவும் கூறப்படுகின்றது.

சந்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(203-29)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை** *(சு.வே)*

தாயின் மடியில்
24.05.1921

இறைவன் அடியில்
22.06.2007

*திதி: 09.07.2008 ஸப்தமி*

சுருங்கப் பேசி, சுருக்கி எழுதி, நல் இலக்கியம் படைத்தீர் - வாழ்வில்
எமை ஏற்றிவைத்த ஏணியாய் வாழ்ந்து எம் தெய்வமுமானீர்!
*ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நாவற்குழி.* **குடும்பத்தினர்.**

---

## விற்பனைக்கு

80 அடி சொக்கட்டான் பந்தல்,
மணவறை விற்பனைக்குண்டு
தொடர்பு
**சுபமங்களா,**
*மல்லாகம் சந்தி.*
*0776075286, 0776309939*

*(76030)*

---

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி கமலநாதன் சாவித்திரி (பேபி)**

மலர்வு
11.05.1950

உதிர்வு
09.07.1995



**ஆண்டுகள் எத்தனை ஆனாலும்**
**உங்களின், உங்களுடன் இணைந்த**
**கனி, ராசு ஆகியோரின் திருவுருவங்கள்**
**எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாதம்மா.**

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

*என்றும் உங்கள் நினைவில் வாழும்:*
**அன்புக் கணவர், பிள்ளைகள்.**

---

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
THE REFUGEES REHABILITATION ORGANIZATION

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Computer Training Center**

* Diploma in Ms.Office
* Diploma in Desktop Publishing
* Information Communication Technology (ICT)
* Kids Programme

முயற்சி
### தொழில்நுட்ப பயிற்சிநெறிகள்

| | |
|---|---|
| கணனித் தட்டச்சு | - 04 மாதங்கள் |
| தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) | - 04 மாதங்கள் |
| வீட்டு மின்னிணைப்பு | - 04 மாதங்கள் |
| புத்தகம் கட்டுதல் | - 03 மாதங்கள் |
| தையல் பயிற்சி, Saree work & Painting | - 04 மாதங்கள் |

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பு :
* விண்ணப்பப் படிவங்களை சுயமாக தயாரித்து அனுப்பவும்.
* பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.
* வகுப்புகள் வாரநாள், வார இறுதிநாள்கள் நடைபெறும்.
* யாழ்ப்பாணம், கட்டுடை ஆகிய இடங்களில் 19.07.2008 அன்றும், இணுவில் பயிற்சி நிலையத்தில் 20.07.2008 அன்றும் மு.ப 10 மணிக்கு ஆரம்பமாகும்.
* பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி

| | | |
|---|---|---|
| தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்<br>106,4ஆம் குறுக்குத்தெரு,<br>யாழ்ப்பாணம். | தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்<br>M.C.Leod வைத்தியசாலை,<br>இணுவில். | தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்<br>கட்டுடை, மானிப்பாய். |

---

## ஈரவிழிகளுடன் ஈராண்டு

அன்னை மடியில்
26 . 01 . 1945



ஆண்டவன் அடியில்
02 . 07 . 2006

**அமரர் சண்முகம் அருளானந்தம்**
(நடத்துநர், இலங்கை போக்குவரத்துச் சபை)
*திதி: 09.07.2008*

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் - ஆறவில்லை எம் துயரம்
எழுதி வைத்த ஓவியம் - போல் நம்முடனே வாழ்ந்திடுவீர்.

*என்றும் உம் நினைவுகளுடன்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*அறிவாலயம்,*
*கரணவாய்.* (75988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவே! இந்தக் கொடுமை ஏனோ?

'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்' பொறுப்பற்ற போக்கில் இந்தியா செயற்படுகின்றது என்று விசனப்படுகிறார்கள் ஈழத் தமிழர்கள். - இப்படி ஐந்து வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

அதை உறுதிப்படுத்துவது போல நடந்து கொள்கின்றது பாரத தேசம்.

இந்தியா தனது உயர்மட்ட அதிகாரிகள் மூவரைக் கடந்த மாதம் மூன்றாம் வாரத்தில் திடுதிப்பென - சத்தம் சந்தடியின்றி - விசேட விமானத்தில் கொழும்புக்கு அனுப்பிய போது, அதை அறிந்து ஆரம்பத்தில் ஈழத் தமிழர்கள் மனதில் மகிழ்ந்துதான் போனார்கள்.

தென்னிலங்கைச் சிங்களத்தின் பேரினவாதப் பிடியில் சிக்கிப் பெரும் கோரயுத்த அழிவை எதிர்கெண்டு நிற்கும் ஈழத் தமிழினத்துக்காகக் குரல் எழுப்பும் நன்னோக்கோடு, இந்தியா காய் நகர்த்துகின்றது; கடைசியாகப் புதுடில்லி ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நீதிக்கண்ணோடு நோக்கத் தயாராகி விட்டது, என்றெல்லாம் ஈழத் தமிழர்கள் புளகாங்கிதம் கொண்டனர்.

ஆனால், 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்பது இப்போதுதான் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது. அதை உணர்ந்து, ஈழத் தமிழர்கள் வெறுப்பும், விசனமும், எரிச்சலும், ஆத்திரமும் அடைந்திருக்கின்றார்கள்.

நியாயமான வாழ்வுக்கும் நீதியோடு கூடிய உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பிய ஈழத் தமிழர்களை ஆயுதப் போராட்டத்தின்பால் திசை திருப்பிவிட்டு, அவர்களுக்கு அரைகுறை ஆயுதப் பயிற்சிகளை வழங்கி, பல விடுதலை இயக்கங்களை ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று போட்டியோடும் உள் முரண்பாடுகளோடும் உருவாக்கி உலவ விட்டதிலிருந்து -

அரைகுறை அவியலாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் மாகாண சபை என்ற மாய மானைத் தோற்றுவித்து, அதைக் காட்டி, அந்தத் திட்டத்தைத் தமிழர்கள் மீது வல்வந்தமாகத் திணித்தமை முதல்கொண்டு -

இப்போது உயர்மட்டக் குழுவைக் கொழும்புக்கு அனுப்பி தற்போதைய இலங்கை அரசுத் தலைமைக்கு 'செமடோஸ்' கொடுத்ததாகக் காட்டிக் கொண்டமை வரையில் -

இலங்கை விவகாரத்தில் புதுடில்லி செய்தவை எல்லாமே பித்தலாட்டம். தன்னுடைய பூகோள அரசியல் நலன்களை எட்டுவதற்காகவும், அவற்றை நிலைப்படுத்தி ஸ்திரப்படுத்துவதற்காகவும் அருகில் இருந்த சிறிய தேசத்திலும், அதில் வசிக்கும் சிறுபான்மையினர் உட்பட தேசிய இனங்கள் மீதும் மிளகாய் அரைத்த வேலையையே இந்தியா செய்திருக்கின்றது; தொடர்ந்தும் செய்தும் வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஆயுதத் தளபாடக் கொள்வனவுக்கு இலங்கை அரசு சீனாவினதும் பாகிஸ்தானினதும் பக்கம் சாய்வதாகக் கூறி அதனைக் கண்டித்து, ஆர்ப்பாட்டம் பண்ணிய இந்தியா, அந்த விடயத்தை வைத்துக்கொண்டே, இதுவரை சீனாவிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டிருந்த மன்னார் எண்ணெய் வள ஆய்வை மெல்லப் பிடுங்கிச் 'சுவாஹா' செய்துகொண்டு விட்டது.

கொழும்புக்கு வந்த இந்திய உயர்மட்டக்குழு ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து - அவர்களின் நலன் குறித்து - கொழும்புடன் ஆர்வம் காட்டிப் பேசுவதாக வெளியே நடிப்புக் காட்டிக்கொண்டு, தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டுள்ளது. எண்ணெய் வள ஆய்வு மற்றும் அகழ்வுப் பணிக்கான உரிமையைப் பிடுங்கிக்கொண்டு, தமிழர் தாயகப் பிரதேசத்தின் வளத்தைச் சுரண்டி, சூறையாடி, ஏப்பம் விடும் திட்டத்தைக் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றது.

இலங்கையில் இனப்போர் உக்கிரமாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களின் தாயகம் மீதான உரிமைக்கான நியாயத்தை யுத்த களத்தில் மோதி உரசிப்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சமயத்தில் பெரும் கொடூரப் போரின் ஆக்கிரமிப்புக்கும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகள் மற்றும் நலிவுகளுக்கும் முகம் கொடுத்து, அடிமைத்தளையில் சிக்குண்டு அல்லற்பட்டு அவலப்பட்டபடி அந்தரிக்கின்றது ஒரு சிறுபான்மை இனம். அவர்களது தாயக பூமியிலிருந்து அவர்கள் வல்வந்தமாக விரட்டியடிக்கப்பட்ட நிலையில் அவர்களின் உள்ளூர் வளங்களைச் சூறையாடும் விதத்தில் - சுரண்டல் நோக்கோடு - அந்நிய சக்திகள் இதற்குள் தலையை நீட்டுவது மோசமான இழி செயலாகும். ஈன நடவடிக்கையாகும். 'எரியும் வீட்டில் பிடுங்குவது லாபம்' என்ற கணக்கில் அமைந்த கொடூரமாகும்.

மன்னாரில் எண்ணெய் அகழ்வு என்ற பெயரிலும், சம்பூரில் அனல் மின் நிலையத் திட்டம் என்ற நாமத்திலும், புல்மோட்டையில் இல்மனைட் கனிவள அகழ்வு என்ற வடிவிலும் இக்கட்டுச் சமயத்தில் ஈழத் தமிழர்களின் மூல வளங்களைச் சூறையாடுவதும்-

ஈழத் தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் பௌத்த - சிங்கள ஆட்சிப் பீடத்துடன் பேரம் பேசி, ஈழத் தமிழரின் தாயக மூலவளத்தை அபகரிப்பதும் -

அதுவும் தமது தாயகத்தைக் காப்பதற்கான வாழ்வா, சாவாப் போராட்டத்தில் ஈழத் தமிழினம் அழுந்திக் கொண்டிருக்கையில் அந்தச் சுரண்டலை மேற்கொள்வதும் -

நாம் முன்னர் கூறியபடி, தவிச்ச முயலடிக்கும் நடவடிக்கைதான். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் ஈனத்தனம்தான். எரிந்த வீட்டில் பிடுங்கும் அபகரிப் புத்தான். கொள்ளையிட்ட பொருளை கொள்ளைக்காரனோடு ஒப்பந்தம் செய்து கொள்வனவு செய்யும் அபத்தம் தான்.

இந்தியாவே! நொந்து போயிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யவேண்டிய நீதியை மறந்து, அவர்களது தாயக வளத்தை - அவர்களது சம்மதமோ, இணக்கமோ, உடன்பாடோ இன்றி - அவர்களின் இந்த நலிவு சமயத்தைப் பயன்படுத்தி - ஆக்கிரமிப்புத் தரப்புடன் சேர்ந்து அபகரிக்கும் கொடுமை ஏனோ உனக்கு?

வர்த்தக ஒப்பந்தம், கூட்டு வியாபார முயற்சி என்ற பெயர்களில் கொழும்புடன் புதுடில்லி செய்யும் இந்த உடன்பாடும் அதைத் தொடரும் நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் பல விபரீதங்களுக்கு வித்திடும் மற்றொரு வரலாற்றுத் தவறின் ஆரம்பமாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# நவாலியில் நடந்த நரபலிகள்; இராணுவத்தின் முன்னேறிப் பாய்தலில்

**நவாலி படுகொலையின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.**

13 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் ''சோகம் ஆறாத வடுக்கள்'' இன்றும் நவாலி மண்ணை ஆக்கிரமித்தவண்ணமே உள்ளன. இந்தக் கொடுமையான பலியெடுப்பு சர்வதேச சமூகத்தையே மிகவும் மன வருத்தத்திற்கு உள்ளாக்கியது.

09.07.2005 ஆம் திகதியன்று தமிழர் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த ஒரு கோரமான கொடியநாள். அன்று தான் நவாலி சென்.பீற்றர்ஸ் மற்றும் நவாலி முருகமூர்த்தி ஆலயங்கள் அழிக்கப்பட்டு, அப்பாவியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களை காவு கொண்ட கரிநாள்.

வரலாற்றில் இந்த ,இரத்தக்கறை படிந்த நாள்களை, நிகழ்வுகளை மறக்க முடியாது. தமிழினம் மறக்காது.

''முன்னேறிப் பாய்தல்'' எனப் பெயர் கொண்ட ''லீப்போர்வேர்ட்'' இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியில் இருந்தும், அளவெட்டியிலிருந்தும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும், விமானத்தாக்குதல்களையும், குண்டுத்தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென்மேற்கு, வலி.மேற்கு, வலி.வடக்குப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள் அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியிலிருந்து விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் தாறுமாறாகப் பாரிய சத்தங்களுடன் நடத்தப்பட்டன.

**தமிழரின் சோக வடுக்களில் ஒன்று**

அன்றையதினம்காலை வலிகாமம் பகுதி மக்கள் உடுத்த உடுபுடைவைகளுடன், கைகளில் அகப்பட்ட பொருள்களுடன், கண்ணீரும் கம்பலையுமாக வெளியேறிய காட்சிகள் இன்றும் மறக்க முடியாத ஒரு சோக நிகழ்வாகத் தமிழர் மனங்களில் வடுவாகப் பதிந்துள்ளன.

கால்நடையாகவும், சைக் கிள்களிலும், தள்ளுவண்டில்களிலும், மாட்டு வண்டில்கள் மூலமாகவும், வழுக்கையாறு வெளி, நவாலி, ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை, மானிப்பாய் பிரதான வீதி வழியாகக் கைக்குழந்தைகள், வயோதிபர்கள், முற்றாக எழுந்து நடக்க முடியாதவர்கள் எனப்பலரும் பல இன்னல்களைச் சுமந்த வண்ணம் சென்றனர்.

அவ் வேளையில் சகல வீதிகளிலும் ஹெலிகொப்டர் தாக்குதல் மற்றும் அகோரமான ஷெல்தாக்குதல்களினால் வீதிக்கு வீதி காயப்பட்டவர்கள், இறந்தவர்கள், , காயமடைந்து இரத்தம் சிந்திக் கொண்டிருந்தவர்கள் எனக் காணப்பட்டனர்.

**ஆலயங்களில் தஞ்சம் நாடிய மக்கள் கொன்றொழிப்பு**

வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருள்கள் அற்ற பொருளாதார தடையான மந்தமான காலப்பகுதி அதுவாகும்.

இதே நேரம் காயமடைந்தவர்களை ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் சென்றபோதும் அவர்களைக் காப்பாற்ற மருந்துகளோ, வைத்தியசாலைகளோ இயங்க முடியாத அவலநிலை. இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் மறக்க முடியாது.

அன்றைய தினம் பல்வேறு வீதிகளினூடாக வெளியேறியோர் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காகத் தஞ்சமடைந்தனர். அவ்வேளையில் யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த ''கிபிர்'' விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளைத் தான்தோன்றித்தனமாக மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசியது.

**ஒரு சில நிமிட நேரத்தில் 147 பேர் கொல்லப்பட்டனர்**

அவ்வளவுதான்.....!

நவாலிக் கிராமம் ஒருகணம் அதிர்ந்தது. மரங்கள் முறிந்து வீழ்ந்து, வீடுகள் தரைமட்டமாகி, மதில்கள் வீழ்ந்து பாரிய புகை மூட்டம் அந்தப் பிரதேசத்தையே மூடியது.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயமும், நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயமும் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் அதிர்ந்தன. சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள். பல நூற்றுக்கணக்கானோர் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, உடல் சிதறிக் குற்றுயிராகக் கிடந்த நிகழ்வுகளை மறந்துவிட முடியாது.

சுமார் 360 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் பலர் சிகிச்சை அளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி உயிர் இழந்த அவலம் சொல்லொணா வேதனை நிறைந்தது. அன்றைய தாக்குதலில் பொதுமக்கள் சேவையில் நேரடியாகப் பங்குகொண்ட வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் களான நவாலி வடக்குப் பிரிவு கிராம அலுவலர் செல்வி. ஹேமலதா செல் வராஜா, சில்லாலைப் பிரிவு கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரி யேல் பிள்ளை ஆகியோரும் பலியாகி னர். இவர்கள் ஞாபகார்த்த தொண்டு நிறுவனங்கள் இன்று யாழ்.மாவட்டத்தில் சேவை (HSCMF)செய்து வருகின்றன.

அன்றைய தினம் மக்கள் தொண்[...] டுப்பணியில் ஈடுபட்டு உணவு, [...] தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்[...] தொண்டர்களும் அந்த இடத்தி[...] துடித்து உயிர் இழந்தனர்.

ஜூலை 9 ஆம் திகதியான[...] கொடூர நாளன்று நவாலி சென்.[...] ஆலயத்திலும், நவாலி சின்[...] காமம் முருகன் ஆலயத்திலு[...] வருடம் நிகழ்வுகளும் வழிபா[...] நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த இனப் படுகொலை நினை[...] நவாலி வடக்கு சோமசுந்தரப் பு[...] வீதியிலும், நவாலி சென். பீற்ற[...] ஆலயப்பகுதியிலும் படு கொலை[...] சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

-செ. ரமேஷ்.

# ஒலிம்பியாட் போட்டி தெரிவுப் பரீட்சை; சனியன்று யாழ்.பல்கலைக்கழகத்தில்

## மாணவர்கள் தொலைபேசியிலும் பதிவு செய்ய வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 9

நாற்பதாவது சர்வதேச பௌதிகவியல் மற்றும் பத்தாவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் பௌதிகவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு முன்னோடிப் பரீட்சை யாக இது அமையும்.

இப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். மாணவர்களின் நலன் கருதி பதிவுகளைத் தொலைபேசி மூலமும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன என போட்டிக்கான வடமாகாண இணைப்பாளர் கலாநிதி நா. சிவயோகன் தெரிவித்தார்.

இன்று தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை 021 222 5924 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு மாணவர்கள் பதிவு செய்யலாம் என இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (202)

# வவுனியா வளாகத்தின் தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 38 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வவுனியா வளாகத்தில் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறியைப் பயில்வதற்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 38 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு தபால் மூலமும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என வளாகத்தின் பதிவாளர் வி.சிறிதரன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே மாணவர்கள் விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பலாம். அத்துடன் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை 024 222 3317 என்ற தொலைநகல் இலக்கத்தின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இதன்மூலம் மாணவர்களின் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் பதிவாளர் கூறினார்.

இக் கற்கைநெறி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 26 | 10.07.2008 வியாழக்கிழமை |
| திதி: | அட்டமி பி.இ. 02.28 வரை |
| நட்சத்திரம் : | அத்தம் பி.ப. 12.20 வரை |
| சுபநேரம் : | 07.29 - 08.58 |
| ராகுகாலம் : | 01.29 - 02.59 |

# இணுவில் பொது நூலகத்தில் ஆங்கிலக் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 9

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரால் இணுவில் பொது நூலகத்தில் விசேட ஆங்கிலக் கற்கை நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோர், பாடசாலையில் இருந்து விலகியோர் உட்பட அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் 17ஆம் திகதி இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் இணுவில் பொது நூலகத்தில் அல்லது இலங்கைச் செஞ்சிலுவை சங்க யாழ்.கிளையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாணவர்களை வகைப்படுத்துவதற்கான மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி இணுவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. (203)

## தீர்த்தமாடும் காட்சியைக் காணவாரீர்!

கைலையில் உறையும் ஈசன்
களி பேருவகை உற்று
கைலையை விட்டிறங்கி வந்து
கைலாச பிள்ளையா ரோடமர்ந்து
கைலை போல் அமைதி சூழ
கண்டனன் திருவிழாவை யிங்கு
கைலை நாயகியுமந்த கந்தவேளைக்கூட்டி
களின் பெற இங்குவந்து
கைலை போலசைந்த தேரிலேறி
களிப்புடன் வானவரும் சூழ
கைலையின் காட்சி நல்கும்
காட்சியை கண்ட பின்னர்
கைலை நாதனின்று களிப்புறத் தீர்த்தமாடும்
காட்சியைக் காணவாரீர்

-விகடகவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
22
*
09
*
1975

உதிர்வு
26
*
05
*
2008



## அமரர் வேணுகோபால் ஆச்சாரி இராமன் ஆச்சாரி

(சிற்ப ஆச்சாரியார்)

சிறு வயது முதலே சிற்பக் கலையில் திகழ்ந்தாயே!
பல பல பட்டங்கள் பெற்றாயே!
ஏனிந்த அவசரமோ காலனவனிற்கு!
பரிதவிக்கின்றோம் நாம் இங்கு,
வெறுங் கூடாய் எம் உடல்நிலை தளர்வதைப் பாராயோ,
ஆறவும் வழியின்றி தேறவும் முடியாமல் மாய்கின்றோமையா
மீளவும் எமை வந்து பாரயோ இராமா!
மீளாத் துயில் கொள்ள முடிகின்றதோ இராமா!
உனதன்பு உறவுகள் தவிப்பதை அறியாயோ!

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிபுரிந்தோருக்கும், தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத் தியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டுக்கிரியைகள் இன்று (09.07.2008) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

(அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் தயவுசெய்து இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

இராமன் சிற்பாலயம்,
306, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(76107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவருக்கு விடுமுறை

கொழும்பு, ஜூலை 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜெயானந்தமூர்த்தி மற்றும் வன்னி மாவட்ட எம்.பி. கனகரட்ணம் ஆகியோர் நேற்றிலிருந்து தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளாதிருக்க நாடாளுமன்றத்தால் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கனகரட்ணம் எம்.பிக்கான விடுமுறையைக் கோரும் பிரேரணையை கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பி. துரைரட்ணசிங்கமும் - ஜெயானந்தமூர்த் திக்கான விடுமுறையைக் கோரும் பிரேரணையை மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கனகசபையும் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தனர்.

சபையின் இணக்கப்பாட்டோடு இரு எம்.பிக்களுக்கும் நாடாளுமன்றால் விடுமுறை வழங்கப்பட்டது. (சி)

## மன்னார்க் கடலில் பிரச்சினை இல்லை; இந்திய நிறுவனத்திற்கு அரசு சிபார்சு!

மன்னார் கடலில் பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் இல்லை என்று அங்கு எண்ணெய் அகழ்வுப் பணியை மேற்கொள்ளும் உரிமையைப் பொறுப்பேற்றுள்ள 'கெயர்ன் இந்தியா' நிறுவனத்திற்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

கெயர்ன் இந்தியா நிறுவனத்தின் பிரதம நிதியதிகாரி இந்திரஜித் பனர்ஜி இதனைத் தெரிவித்துள்ளார். "மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் வள ஆய்வின்போது பாதுகாப்பு நிலை குறித்தும் சிந்தித்தோம். அரசு அப்பகுதி ஆபத்தற்றது எனத் தெரிவித்துவிட்டது" - என்று பனர்ஜி தெரிவித்துள்ளார்.

எண்ணெய்வள ஆய்வு என்பது எப்போதும் ஆபத்தான வர்த்தகம், இதில் வெற்றி என்பது நிச்சயமாகக் கூற முடியாத விடயம் என்றும் இந்திரஜித் பனர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அப்பகுதியில் பூகம்பத்திற்கான சாத்தியக்கூறு உள்ளதா என்ற ஆய்வினையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், கடலுக்கடியில் என்ன உள்ளது என்பது எதிர்வு கூற முடியாத விடயம் என்றும் தெரிவித்துள்ளார்.

கெயர்ன் இந்தியா நிறுவனம் தென்னாசியாவில் மூன்று தசாப்தகாலமாக செயற்பட்டு வருவதாகவும், பிராந்தியத்தின் பூகோளவியல் குறித்து அது நன்கு அறிந்துள்ளதாகவும் பனர்ஜி தெரிவித்துள்ளார். மேலும் 40 இற்கும் மேற்பட்ட இடங்க ளில் இயற்கை வாயுவை தனது நிறுவனம் கண்டுபிடித்துள்ளதாகவும் இதில் இந்தியா வின் ராஜஸ்தான் பாலைவனத்தில் உள்ள மங்களாவில் மேற்கொள்ளப்பட்ட கண்டு பிடிப்பு முக்கியமானதெனவும், அங்கு மூவாயிரத்து ஏழுநூறு கோடி பரல் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த 'கெயர்ன் எனேர்ஜி' என்று நிறுவனத்தின் கிளையே 'கெயான இந்தியா' என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## புதிய பிரதி சபாநாயகராக ஆளுங்கட்சியின் பிரியங்கர

கொழும்பு, ஜூலை 09

கீதாஞ்ஜன குணவர்த்தன பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அந்த வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட எம். பி. பிரியங்கர ஜயரட்ண புதிய பிரதி சபாநாயகராக ஏகமனதாக நேற்று நாடாளுமன்றில் தெரிவு செய்யப்பட்டார்.

இவரின் பெயரை பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க பிரேரித்தார்.சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா அதை ஆமோதித்தார்.எதிர்க்கட்சி களின் சார்பிலும் எவரையாவது பிரேரிக்குமாறு சபாநாயகர் கேட்டுக் கொண்டபோதும் எவரது பெயரும் பிரேரிக்கப்படவில்லை.

இதனால், வாக்கெடுப் பின்றி பிரியங்கர ஏகமனதாகத் தெரிவு செய் யப்பட்டார் என சபாநாயகர் அறிவித்தார்.

கிளைமோர் தாக்குதலால் கொல்லப்பட்ட புத்தளம் மாவட்ட எம்.பியும் அமைச்சரு மான த. மு. தஸநாயக்கவின்எம்.பி. பதவிவெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டவரே பிரியங்கர ஜயரட்ன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆசிரியர் தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்துக்கு ஒத்துழைப்பு

கொழும்பு, ஜூலை 9

நாளை நாளை நடை பெறவுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொள்வ தெனப் பிரதான 8 ஆசிரியர் தொழிற்சங்கங் கள் தீர்மானித்துள்ளன.

இவற்றுள் 5 தொழிற்சங்கங்களை ஓரணியில் கொண்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பு இது தொடர்பாக அறிவிக்க, நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

5 சங்கங்களுள் ஒன்றான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருப்பது ஜே.வி.பி. என்றாலும் அந்த வேலைநிறுத்தத்தின் நோக்கம் எமது ஆசிரியர்களின் பிரச்சினையுடன் தொடர்புபட்டது.

நாமும் எமது சம்பளப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கோரி 11 வருடங்களாக அரசைக் கேட்டு வருகிறோம். பல போராட்டங்களையும் நடத்திவிட்டோம்.

எதற்கும் முடிவு கிட்டவில்லை. நாளை நடத்தப்படவிருக்கும் போராட்டம் சம்பள அதிகரிப்பை வலியுறுத்துவதால் நாமும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள் ளத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

இதேவேளை, மூன்று ஆசிரியர் தொழிற் சங்கங்களைக் கொண்டுள்ள அணியைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க நாளை வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமது மூன்று ஆசிரியர் தொழிற்சங்கங்களும் கலந்துகொள்வதென முடிவெடுத்துள்ளன- என்றார். (அ-சி)

### நாளைய போராட்டத்திற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

கொழும்பு, ஜூலை 9

நாடளாவிய ரீதியில் தொழிலாளர்கள் நாளை முன்னெடுக்கவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தமது முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்திருக்கிறது.

இந்த விடயம் தொடர்பில் சங்கம் தெரிவித்திருப்பவை வருமாறு:-

5000 ரூபா சம்பள உயர்வு கோரி நாளை 10 ஆம் திகதி தொழிலாளர்கள் மேற்கொள்ளவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது. இந்தப் போராட்டத்தின் போது நாடுமுழுவதிலும் உள்ள தமிழ் ஆசிரியர் அனைவரையும் ஒன்றிணைந்து போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்ளுகின்றோம்- என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. (சி)

## வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஊடக அமைப்புகளும் ஆதரவு

கொழும்பு, ஜூலை 9

நாளை நடைபெறவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஐந்து பிரதான ஊடக அமைப்புகள் கூட்டாக ஆதரவு தெரிவித்திருக்கின்றன.

இது தொடர்பாக அந்த அமைப்புகள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

2008 ஜூலை 10ஆம் திகதி நடைபெறவுள்ள வேலைநிறுத்தம், உழைக்கும் வர்க்கத்தின் உரிமை எனக் கருதும் எமது அமைப்புகள் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றன. நாளுக்கு நாள் துரிதமாக அதிகரித்துச் செல்லும் வாழ்க் கைச் செலவுக்கு முன்னால் இந்நாட்டின் உழைக்கு ம் மக்கள் மனிதத்துவத்துக்கு ஏற்ப சமூக, கலாசாரமற்றும்பொருளாதாரரீதியில்வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

இந்நிலையின் கீழ் வாழ்வதற்கு ஏற்ற வேதனத்தைக் கோரிப் போராட்டம் நடத்துவது வாழ்வதற்குள்ள உரிமையைப் போலவே அடிப்படை மனித உரிமையென நாம் கருதுகின்றோம். அதேபோல், ஊடக ஊழியர்களான நாம் அனைவரும்இதேநிலைக்குமுகம்கொடுக்கின்றோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

5000 ரூபா சம்பள உயர்வும் மற்றும் அரசு இணக்கம் தெரிவித்துள்ளவாறு அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் எதுவித குறையுமின்றி வழங்கக் கோருவது நியாயமானதென்றே எமது அமைப்புகள் எண்ணுகின்றன. எனவே, இக் கோரிக்கைகளுக்கு எமது அமைப்புகள் ஆதரவு வழங்குகின்றன. தமது கோரிக்கைகளை வெற்றிகொள்ள நடைபெற்ற பேச்சுகள் தோல்வியடைந்ததை அடுத்து வேலைநிறுத்தம் செய்யும் ஜனநாயக உரிமையை நடைமுறைப்படுத்துவதைத் தடுத்து நிறுத்த அரசு யுத்த ரீதியான சுலோகங்களை முன்வைக்க எடுக் கும் முயற்சிகளை நாம் கண்டிக்கின்றோம். கடந்த காலம் முழுவதும் ஊடக சுதந்தி ரத்தை அடக்கி ஒடுக்குவதற்காக அரசு யுத் தத்தைக் காரணம் காட்டியும் புலிப் பயங்கரவாத முத்திரையைக் குத்தியும் நடவடிக்கை மேற்கொண்டது.

உழைக்கும் மக்கள் அனைவரதும் பொதுக் கோரிக்கையை ஏற்று சம்பள உயர்வை வழங்கும்படி நாம் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். அதேபோல் அமைப்பு ரீதியாக ஒன்றுபடுவது, பேரம் பேசுவது, மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வேலைநிறுத்தம் செய்யும் ஜனநாயக உரிமைகளை அடக்கி, ஒடுக்க முயற்சிக்க வேணடாமெனவும் அரசைக் கேட்டுக் கொள்கின்றோம். (சி)

## பட்டதாரிகளுக்கு மட்டுமே 2009 முதல் ஆசிரியர் பதவி

### கல்வி அமைச்சின் புதிய திட்டம்

கொழும்பு, ஜூலை 9

ஆசிரியர் பதவிகளுக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆள்கள் எடுக்கும் போது அவர்கள் முதல்நிலைப் பட்டதாரிகளாய் இருப்பது அவசியம் என்று கல்வி அமைச்சு புதிய கல்விக் கொள்கை ஒன்றை வகுத்துள்ளது.

பட்டதாரிகளை மட்டுமே ஆசிரியர்களாய் நியமிக்கும் கொள்கையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் சுசில்பிரேமஜயந் அமைச்சரவையில் பத்திரம் ஒன்றை அண்மையில் சமர்ப்பித்தார். இக் கொள்கையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

கல்வியின் தரத்தை மேம்படுத்துவது தமது பாடசாலைகள் அமைந்திருக்கும் பூகோள சூழல் ஏதுவாய் இருந்தாலும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடம் இருந்து கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான மாணவர்களின் உரிமையை உறுதிசெய்வது, கல்வியின் பயன்பாட்டை மேம்படுத்துவது ஆகிய குறிக்கோள்களைக் கொண்டதாக இந்தப்புதிய கொள்கைத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

ஆசிரியர் தொழிலுக்கு சேர்த்துக் கொள்வதற்குத் தகுதிபெறுகின்றவர்கள் ஒன்றரைவருடகாலம் முழுமையான துறைசார்ந்த பயிற்சிகளை பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். (ப)

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 25 . 03 . 1947 | 09 . 06 . 2008 |

### சோமசுந்தரம் ஆத்மலிங்கம்

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிறப்பிடமாய்
பாசமுடன் இணைந்த இனிய உங்கள் முகம்
எங்கள் நெஞ்சை விட்டகலாது

கடந்த 9.06.2008 அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவான இன்று (09.07.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*31, குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

குடும்பத்தினர்.

## மகாஜன பழைய மாணவர் கவனத்திற்கு!

பழைய மாணவர்களின் குழந்தைக் கவிதைத் தொகுப்பொன்றை வெகுவிரைவில் வெளியீடு செய்வதற்கான அச்சு வேலை ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான கவிதையை அனுப்ப விரும்புவோர் மூன்று கவிதைகளை 19. 07.2008 இற்கு முன்னர் பாடசாலை முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மகாஜனவில் கற்பித்த ஆசிரியர்களும் அனுப்பி வைக்கலாம்.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

நூலாக்கக் குழுவினர்.

## சுத்திகரிப்புத் தொழிலாளர் செயல்முறைப் பரீட்சை 14, 15 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்(ஆண்கள்) பதவிகளுக்கு விண்ணப்பித்தோருக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இம்மாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் மேற்படி செயன்முறைப் பரீட்சை, பண்ணையில் உள்ள சுகாதாரக் கிராமத்தில் நடைபெறும் என்று யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

செயன் முறை நேர்முகப்பரீட்சைக்கு 150 விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு அப்பாத்துரை (அப்பா அண்ணை)

(விநாயகர் லோறி உரிமையாளர்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு அப்பாத்துரை இந்தியாவில் நேற்று (08.07.2008) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

*தகவல்:*
குடும்பத்தினர்

## துயர் பகிர்கின்றோம்

யாழ்.மாவட்ட முன்னைநாள் உதவி விவசாய
பணிப்பாளரும், தற்போது வடக்கு மாகாண விவசாய
திணைக்கள பிரதி விவசாய பணிப்பாளருமான
திரு.செ.செல்வராசா அவர்களின் அன்புத் தாய்

### திருமதி செல்லக்கண்டு அருளம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திய டைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்கள
உத்தியோகத்தர், ஊழியர்கள்

## தடுப்பூசி ஏற்றும்பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறமாட்டாது என்று மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து தடுப்பூசி மருந்து வந்து சேராததே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். (01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் ... ப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இராணுவத் தளபதி, கோத்தபாய ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு

**மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாக**

கொழும்பு, ஜூலை 09

கிழக்கு மாகாணம் தொப்பிகலவைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்கும் படை நடவடிக்கைக்குப் பொறுப்பாகவிருந்த கிழக்கு மாகாண முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப் பிட்டியவுக்கு உரிய பாதுகாப்பை வழங்கும்படி உயர் நீதிமன்றம் விடுத்த இடைக்கால உத்தரவை நடைமுறையில் செயற்ப டுத்தத் தவறியதன் மூலம் இராணுவத் தளபதியும், பாதுகாப்புச்செயலாளரும் நீதி மன்றத்தை அவமதித்தனரா என்பது குறித்து உயர் நீதிமன்றம் விசாரணை செய்யவிருக்கின்றது.

ஜெனரல் பன்னிப்பிட்டிய தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்த போதே உயர் நீதிமன்றம் இப்படித் தீர்மானித்தது.

தம்முடன் கருத்து முரண்பாடுகொண்ட இராணுவத்தளபதி, தம்மை கிழக்கு மாகாண இராணுவத்தளபதிப் பதவியிலிருந்து இடமாற்றியமையுடன், கொழும்பு, சமிட் பிளேஸில் தாம் தங்கியிருக்கும் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும்படி பணித்தார் என்றும், தமக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பைக் குறைத்துத் தம்மை ஆபத்தில் மூழ்கடித்தார் என்றும் ஜெனரல் பன்னிப்பிட்டிய தமது அடிப்படை உரிமை மீறல் மனுவில் தெரிவித்திருந்தார்.

**புலிகள் தம்மீது சீற்றம் என்கிறார்**

புலிகளுக்கு எதிரான கிழக்குப் படை நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்தமையால் புலிகள் தம்மீது கடும் சீற்றமுற்றிருக்கின்றனர் என்று தெரிவித்துள்ள ஜெனரல் பன்னிப்பிட்டிய இச்சமயத்தில் தமது பாதுகாப்பைக் குறைத்து தமது உயிரை ஆபத்தில் மூழ்கடித்திருக்கின்றார் இராணுவத் தளபதி என்றும் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயங்களைப் பரிசீலனைக்கு எடுத்த உயர்நீதிமன்றம் ஜெனரல் பன்னிப்பிட்டிய தற்போது தங்கியுள்ள அரச இல்லத்திலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க அனுமதிக்கும்படியும் -

ஜெனரல் பன்னிப்பிட்டியவுக்குக் குறைந்தது பத்து மெய்ப்பாதுகாவலர்களை வழங்கும்படியும் - இடைக்கால உத்தரவொன்றை பிறப் பித் திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மீறல் வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, ராஜா பெர்னாண்டோ, பி.ஏ. ரத்நாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி. சில்வா, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் மனுதார் ஜெனரல் பன்னிப்பிட்டியவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் எதிர் மனுதாரர்களான இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷவும் நீதிமன்ற அவமதிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்த மனுதாரரின் சட்டத்த ரணி, இதற்காக அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த விடயம் குறித்தும் தாம் ஆராய்ந்து அடுத்த தவணையின்போது நீதிமன்றுக்குத் தகவல் வெளியிடுவார் என அரசுத் தரப்பின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி நெரின்புள்ளே தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் 23 ஆம்திகதி இவ் வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது எதிர்மனுதாரர் களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் காக நடவடிக்கை எடுப்பதா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றும் நீதியரசர்கள் அறிவித்தனர். (உ)

## 55 வயதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பிரதேச செயலரின் சிபார்சுக் கடிதத்துடன் பயணத்தை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இந்த வசதி கடந்த திங்கட் கிழமை தொடக்கம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும்-

இனிமேல் 55வயதுக்கு மேற்பட்ட சகலரும் பயண அனுமதி பெற்றே பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறை அமுலுக்கு வந்த திங்கட்கிழமைக்கு முன்னர் கப்பலிலோ, விமானத்திலோ பயணம் செய்யப் பதிவு செய்தவர்கள் படையினரின் அனுமதி பெறவேண்டியதில்லை என்றும் பாது காப்பு சிவில் பிரிவு அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்தனர்.

55வயதுக்கு மேற்பட்டவர்கள், வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்வ தற்கு ஏனையோரைப் போன்று பாதுகாப் புப் படையினரின் பயண அனுமதி பெற வேண்டியிருந்தது. எனினும் சில காலமாக அந்த முறை நீக்கப்பட்டு, பிரதேச செயலரின் சிபார்சுடன் பயணம் செய்யும் வசதி செய்யபப்ட்டிருந்தது. (அ-01)

## குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இப்போது வரை குண்டு துளைக்காத 31 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

அவை ஜனாதிபதிக்கும்முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார். ஆனால் மேலும் யார், யாருக்கு இவை வழங்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கூறமுடியாது என்று அவர் கூறிவிட்டார்.

இந்த வாகனங்கள் தாய்லாந்து, ஜேர்மனி, இந்தியா மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்றும் அவர் கூறினார்.

13 ஆவது நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டதன் பின்பு எத்தனை குண்டு துளைக்காத வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் -

அந்த வாகனங்களில் எவையேனும் கிழக்கின் முதலமைச்சர் பிள்ளையானுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றும் - ரவி கருணாநாயக்கா அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

பிள்ளையானின் பாதுகாப்புக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் - குண்டு துளைக்காத வாகனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப்பற்றி பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கூறமுடியாது என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு குண்டு துளைக்காத வாகனம் ஒன்று வழங்கப்படும் என்று கூறிய அரசு இறுதியில் அந்த வாகனத்தை அவருக்கு வழங்கவில்லை என்றும் கருணாநாயக்கா மேலும் கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவருக்குத் தேவையான பாதுகாப்பு முழுமையாக வழங்கப்பட்டிருக்கின்றது என்று பதிலளித்த அமைச்சர், ரணிலுக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் உள் வீட்டுப் பிரச்சினைக்கு அரசு பாதுகாப்பு வழங்க முடியாது. - என்றார். (அ-சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

நீண்ட நாள்களின் பின்னர் இரவு நேரத்தில் ஹெலி நோட்டமிட்டதால் குடாநாட்டில் பலபகுதிகளிலும் மக்கள் மத்தியில் பெரும்பதற்றத்தை ஏற்படுத்தியது. (அ-01)

## தொலைக்காட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருக்கின்றார்.

இந்த வழக்குப் பற்றிய விடயங்களைமேற்படி மூன்று மொழித் தொலைக்காட் சிச் சேவைகள் ஊடாகவும் செய்தியாளர் ஜெயக்குமார் விவரமாகவெளிப்படுத்தி வருகின்றார்.

அரச ஊடகங்களும் ஏனைய இலத்திரனியல் ஊடகங்களும் மேற்படி இராணுவ நடவடிக்கைகளில் சாதனை புரிந்த ஒரு சிங்கள அதிகாரி கேவலமாக நடத்தப்பட்டமை பற்றிய விவரங்களை அடியோடு மறைத்துவிட, இந்த மூன்று மொழி இலத்திரனியல் ஊடகம் மட்டுமே இந்த வழக்குப் பற்றிய செய்திகளை புட்டுப் புட்டுப் வைத்துத் தென்னிலங்கையில் அம்பலப்படுத்தி வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்காகவே ஊடகவியலாளர் ஜெயக்குமார் மிரட்டப்பட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது, முன்னர் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்காக இராணுவத் தளபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக் குறித்து அடுத்த வழக்குத் தவணையின்போது விசாரிப்பது என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

வழக்கு விசாரணையை அவதானித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஜெயக்குமாரை விசாரணை முடிவுற்றதும் ஹல்ஸ்டோர்ப் வளாகத்தில் காணப்பட்ட ஒரு 'டிப்-டொப்' ஆசாமி தனியே அழைத்துச் சென்றாராம். அந்த வழக்கு விசாரணை பற்றிய அன்றைய நடவடிக்கை குறித்து ஒரு தகவலும் அவரது மூன்று மொழி தொலைக் காட்சிச் சேவையிலும் வரக்கூடாது எனக் கடும் தொனியில் அந்த நபர் ஜெயக்குமாரை எச்சரித்தார் என்று கூறப்படுகிறது.

எனினும், இவ் வழக்குப் பற்றிய விவகாரம் அந்த ஊடகங்களில் விவரமாக நேற்றிரவு வெளியானது. (உ)

CHEMISTRY
A/L 2009
Organic Chemistry
Benzene
ஆரம்பம்:-10.07.2008
Thur - 4.30 Pm
A/L 2010
புதிய பிரிவு
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்
ஆரம்பம்:-11.07.2008
Fri - 6.30 Am
(Tue. Fri 6.30/7.30Am)
S.Vasu
NAVALAR
Jaffna

LOGIC
Paper Class
A/L 2009
ஆரம்பம்:-
10.07.2008
வியாழ. 4.00pm
P. கமல்
UNIVERSAL

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்கு கொண்டு விரை யப்பட்டனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

அன்றைய தினம் கிளாலி முன்னரங்க நிலைகளில் துப்புரவு பணிகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் மிதிவெடிகளில் சிக்கியதில் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் மேலும் கூறப்பட்டது. (அ-சி)

## குஞ்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையானசெல்லத்துரைகமல்(வயது - 24) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, பரந்தன் பகுதிலிருந்து தென்மேற்கே 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் விநியோக மையங்களை இலக்கு வைத்தே நேற்றுக் காலை 10.15 மணிக்கும் பிற்பகல் 1.30 மணியளவிலும்விமானப்படையினரின்ஜெற்விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்று விமானப்படையினர் தெரிவித்தனர். (சி)

## வெள்ளைவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுத் தாக்கப்ப டுகின்றனர்.

தாக்குபவர்களைக் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு தாக்கப்பட்டவர்களை மேலும் மேலும் காயப்படுத்தும் விதத்தில் அரசு செயற்படுகிறது.

அரசு இவ்வாறான செயற்பாடுகளை உடன்நிறுத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசால் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க முடியாதுவிட்டால் - இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுவிட்டால் - ஆட்சியைக் கலைத்துவிடவேண்டும் .

இன்று நாட்டில் ஏராளமானவர்கள் வெள்ளைவான்கள கடத்திச் செல்லப்படுகின்றனர். இந்தக் கடத்தல்களுக்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த இதுவரையிலும் அரசினால் முடியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் இந்தக் கடத்தல்களுக்குப் பின்னணியாக இருப் பவர்களே அரசுத் தரப்பினரும் படையினரும்தான். எனவே அவர்கள்தொடர்பான தகவல்கள், விவரங்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் - என்றார் ஆவர் (அ-சி)

சுற்றாடல் படங்கள்
★ தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையின் சுற்றாடல் பாடத்தின் கற்றலுக்குரிய படங்கள்.
★ 99% படங்கள் உள்ளடக்கப்பட்ட 50பக் கங்கள் கொண்ட மிகத்தெளிவான பிரதிகள்.
★ தரம் 3,4,5 மாணவர்களுக்கும் பயன்படக் கூடியது.
(புத்தகசாலைகளில் கிடைக்கும்)
வெளியீடு
கற்சுமி கல்வி நிறுவனம்
... நாவலர் வீதி, யாழ்.

## திருநெல்வேலி குடும்பஸ்தரைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை9

திருநெல்வேலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தம்பிஐயா சிதம்பரப்பிள்ளை (வயது 61) என்ற குடும்பஸ்தரையே காணவில்லையென அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

## ஜே.வி.பி. அலுவலகம் அ'புரத்தில் தீக்கிரை!

அநுராதபுரம் கலன் பிந்துனுவெவ வில் உள்ள ஜே.வி.பியின் கட்சி அலுவலகம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இனந் தெரியாதவர்களால் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்திற்கான ஜே.வி.பி. வேட்பாளர் எஸ். திலகசிறியின் வீட்டில் இயங்கிய அலுவலகமே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 2 மணியளவில் ஆயுதங்களுடன் வந்த குழுவினர் அலுவலகத்தின் கதவை உடைத்து உள்ளே

நுழைந்து அங்கிருந்த கட்சிக் கொடி உட்படப் பல பொருள்களுக்கும் அலுவலகத்திற்கும் தீ வைத்தனர்என திலகசிறி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என அவர் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநுரகுமார திஸநாயக்க மற்றும் ரணவீர பத்திரன ஆகியோரால் பயன்படுத்தப்படும் அநுராதபுர மாவட்ட அலுவலகமொன்றும் அரச ஆதரவாளர்க ளால் தாக்கப்பட்டதாக ஜே.வி.பி. தெரிவித் துள்ளது.

வெள்ளை வானில் வந்தவர்களால் கட்சியின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(அ-சி)

## இந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதைச் சரிவரக் கையாளும் ஐரோப்பிய நாடுகள் செழிப்படைந்துள்ளன. பிழையாகக் கையாண்ட நாடுகள் இப்போது அழிகின்றன.

வல்லரசு நாடுகள் எரிபொருள் வளத்தைச் சுரண்டுவதற்காகவே அவ் வளம் உள்ள நாடுகளுடன்சண்டை போடுகின்றன.

இதே அபாயம், எமது நாட்டுக்கும் ஏற்பட வாய்ப்புண்டு. சரியாகச் செயற்பட்டால் மாத்திரமே இந்த அபாயத்தில் இருந்து தப்ப முடியும்.

இலங்கையில் எண்ணெய் அகழ்வுப் பணியை மேற்கொள்வதற்காக இந்தியாவுடன் செய்த ஒப்பந்தம் தொடர்பில் நாம் முன்வைத்த கருத்துக்கள் - ஆலோசனைகள் எவையும் கவனத்தில் எடுக்கப்படாமல் - நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொள்ளாமல் - இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பானசிபாரிசுகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக எம்.பி.க்களையும் , நிபுணர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்றார். (சி)

## விமானத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த இடங்களிலிருந்து படையினர் இந்த ஒளியைப் பாச்சியதை அவதானிக்க முடிந்தது. தரையிலிருந்து வானத்தை வட்டமிட்ட விமானத்தை நோக்கி 'லேசர்' குண்டுகளை படையினர் ஏவினர் என்று கூறப்படுகிறது. இதற்கிடையில் இது விமானப் படையினரின் ஒத்திகைதான் என்றும், இதனால் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை என்றும் விமானப்படையினர் நேற்றிரவு தெரிவித்திருந்தனர். (சி)

2008A/L வரலாறு
மாபெரும் கருத்தரங்கு
2008 க.பொ.த உயர்தரத்தில் வரலாறு பாடத்தில் தோற்றுபவர்களுக்கான பயனுள்ள கருத்தரங்கு.
யாழின் முன்னணி வரலாற்று பட்டதாரி ஆசிரியர்களான
M. சத்தியன் S.சுஜிகரன்
M. பத்மன் S.S.தாசன்
ஆகியோரின் ஒன்றிணைந்த சேவை
காலம்:-10.07.2008 வியாழன் மற்றும் 11.07.2008 வெள்ளி
நேரம்:- காலை 8.00 -பி.ப 4.00 மணிவரை
இடம்:- DMI, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
கட்டணம் - 150ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.